www.padippakam.com



குறிப்பிட்ட சமுதாயத்தில்
எதிரெதிர் நிற்கும்,
சமூக வர்க்கங்களில்
சமுதாய வளர்ச்சிக்கு
தடையாகிவிட்ட,
உடைத்தெறியப்பட
வேண்டிய
உற்பத்தி உறவுகளையும்
மேல்கட்டுமானத்தையும்
கட்டிக் காக்கும் வர்க்கங்கள்
தவிர்க்க முடியாமல்
வீழ்ச்சியை நோக்கிச்
செல்கின்றன.
அதே நேரத்தில் புதிய
முற்போக்கான உற்பத்தி
உறவுகளுக்காகவும்
மேல்கட்டுமானத்திற்காகவும்
போராடும் வர்க்கங்கள்
தவிர்க்க முடியாதபடி
அதிகாரத்தைக்
கைப்பற்றுவதை நோக்கி
வளர்ந்து கொண்டிருக்கின்றன.
இவை பாட்டாளி வர்க்க
இயக்கத்தின் விருப்பங்களைச்
சார்ந்தவை அல்ல.
மாறாக, அதனின்றும்
சுதந்திரமாய் இயங்குகின்ற
இயக்க விதிகளைக்
கொண்டவை ஆகும்.
பாட்டாளி வர்க்க இயக்கம்
இவற்றை அங்கீகரித்து
அதனடிப்படையில் தனது
திட்டங்களையும்,
செயல்பாடுகளையும்
அமைத்துக் கொள்ளும்போது
மட்டும்தான்
வெற்றி பெற முடியும்



# திட்டம், மூலவுத்தி, செயலுத்தி என்றால் என்ன?

**கார்முகில்**

படிப்பகம்

www.padippkam.com

உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!



தநாமாலெக

படிப்பகம்

www.padippkam.com

# திட்டம், மூலவுத்தி, செயலுத்தி என்றால் என்ன?

காா்முகில்

தமிழ்நாடு மாா்க்சிய-லெனினியக் கட்சி

படிப்பகம்

www.padippkam.com

முதற்பதிப்பு : அக்டோபர் 1983
இரண்டாம் பதிப்பு : சனவரி 2004

விலை : ரூ 25

1981 இல் கட்சிக்குள் சுற்றுக்குவிடப்பட்டது. சில திருத்தங்களுடன் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்படுகிறது.

## உள்ளே . . .

★ கட்சித் திட்டம்
★ குறிப்பான திட்டம்
★ மூலவுத்தி
★ செயலுத்தி
★ முழக்கங்களும் செயலுத்தியும்
★ திட்டம், மூலவுத்தி, செயலுத்தி- உறவு
★ அரசியல் படையும் ஆயுதப் படையும்
★ இராணுவ மூலவுத்தியும் அரசியல் மூலவுத்தியும்
★ அரசியல் போராட்டம்-ஆயுதப் போராட்டம்-உறவு
★ படை கட்டுவது
★ சிவப்பு அரசியல் அதிகாரத்தை நிறுவுவது
★ கட்சியும் மக்கள் திரள் அமைப்புகளும்

படிப்பகம்

www.padippkam.com

# திட்டம், மூலவுத்தி, செயலுத்தி என்றால் என்ன?

பாட்டாளி வர்க்க இயக்கம் இரண்டு பக்கங்களைக் கொண்டுள்ளது. அவை:

1. **புறநிலைப் பக்கம்** (Objective side)
2. **அகநிலைப் பக்கம்** (Subjective side)

புரையோடிப் போன சமுதாயத்தை வீழ்த்திவிட்டு, புதிய சமுதாயத்தைப் படைக்கும் வரலாற்றுக் கடமையை ஏற்றுக் கொண்டிருக்கும் பாட்டாளி வர்க்கம் இக்கடமையை நிறைவேற்ற நிலவும் சமுதாயத்தில் உள்ள முரண்பாடுகளை ஆய்வு செய்கிறது. ஒவ்வொரு சமுதாயமும் ஒரு சமுதாய வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கைக் (Process of development of society) கொண்டிருக்கிறது. அதாவது உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாட்டையும், அடித்தளத்திற்கும் மேல் கட்டுமானத்திற்கும் இடையிலான முரண்பாட்டையும் (சமுதாய இயக்க வடிவத்தின் அடிப்படை முரண்பாடு) அச்சமுதாயத்திற்குரிய சிறப்பியல்பான முரண்பாடுகளில் (Particularity of Contradiction) (குறித்த சமுதாய நிகழ்ச்சிப் போக்கின் அடிப்படை முரண்பாடு) கொண்டிருக்கிறது.

இம்முரண்பாடுகளே சமுதாய வளர்ச்சிக்குத் தடையாகி விட்ட உற்பத்தி உறவுகளையும், மேல் கட்டுமானத்தையும் கட்டிக் காக்கும் வர்க்கங்களுக்கும் அவற்றை உடைத்தெறிந்துவிட்டு, புதிய உற்பத்தி உறவுகளையும், புதிய மேல் கட்டுமானத்தையும் உருவாக்கப் போராடும் வர்க்கங்களுக்கும் இடையிலான முரண்பாடாக - அரசியல், பொருளாதார, கலாச்சார அரங்குகளில் வர்க்கப் போராட்டமாக

படிப்பகம்

www.padippkam.com



வெளிப்படுகின்றன. இவ்வாறு குறிப்பிட்ட சமுதாயத்தில் எதிர்எதிர் நிற்கும் சமூக வர்க்கங்களில் சமுதாய வளர்ச்சிக்குத் தடையாகிவிட்ட, உடைத்தெறியப்பட வேண்டிய உற்பத்தி உறவுகளையும் மேல் கட்டுமானத்தையும் கட்டிக் காக்கும் வர்க்கங்கள் தவிர்க்க முடியாமல் வீழ்ச்சியை நோக்கிச் செல்கின்றன. அதே நேரத்தில் புதிய முற்போக்கான உற்பத்தி உறவுகளுக்காகவும், மேல் கட்டுமானத்திற்காகவும் போராடும் வர்க்கங்கள் தவிர்க்க முடியாதபடி அதிகாரத்தைக் கைப்பற்றுவதை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கின்றன. இவை பாட்டாளி வர்க்க இயக்கத்தின் விருப்பங்களைச் சார்ந்தவை அல்ல. மாறாக, அதனின்றும் சுதந்திரமாய் இயங்குகின்ற இயக்க விதிகளைக் கொண்டவையாகும். இவற்றையே பாட்டாளி வர்க்க இயக்கத்தின் **புறநிலைப் பக்கம்** என்கிறோம். இவற்றைப் பாட்டாளி வர்க்க இயக்கம் மாற்றவோ, நிறுத்தவோ முடியாது. மாறாக, அவற்றை அங்கீகரித்து அதனடிப்படையில் தனது திட்டங்களையும் செயல்பாடுகளையும் அமைத்துக் கொள்ளும் போது மட்டும்தான் வெற்றி பெற முடியும். பாட்டாளி வர்க்க இயக்கத்தின் திட்டங்களும், செயல்பாடுகளும் இயக்கத்தின் புறநிலைப் பக்கத்தின் இயக்கப் போக்கை துரிதப் படுத்துவது, முறைப்படுத்துவது என்ற அளவில் மட்டுமே அதன் மீது செல்வாக்குச் செலுத்த முடியும். எனவேதான், மார்க்ஸ் கூறியது போல் ''எப்படிப்பட்ட கடமைகளை நிறைவேற்ற முடியுமோ அப்படிப்பட்ட கடமைகளைத்தான் எப்போதுமே மனிதகுலம் தனது சாதனைக்கு எடுத்துக் கொள்கிறது'' (அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு பங்களிப்பு). மார்க்சிய வரலாற்றியல் பொருள்முதல்வாதம் இதை விளக்குகிறது.

புறநிலைப் பக்க இயக்க விதிகளால் வரலாற்றுப் பூர்வமாகத் தீர்மானிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்கு உணர்வு பெற்ற தொழிலாளி வர்க்கம் அமைத்துக் கொள்ளும் கட்சி மற்றும் பிற மக்கள் திரள் அமைப்புகளே **அகநிலைப் பக்கம்** எனப்படுகிறது.

அதாவது, புரட்சியை வெற்றிகரமாக நிறைவேற்ற புறநிலைப் பக்க இயக்க விதிகளின் அடிப்படையில் வரலாற்றுக் கடமைகளைத் தீர்மானித்துக்கொண்டு அவற்றை நிறைவேற்ற பரந்துபட்ட மக்களை அணி திரட்டி வழி நடத்திச் செல்ல கட்டப்படும் கட்சி, ஐக்கிய முன்னணி, படை ஆகியவையே அகநிலைப் பக்கம் ஆகும்.



# 1
# கட்சித் திட்டம்

வரலாற்று வகையில் தவிர்க்க முடியாமல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதை நோக்கி வளரும் வர்க்கங்களின் வரலாற்று வகையிலான நோக்கங்களை, இலட்சியங்களை விஞ்ஞானப்பூர்வமாகத் தொகுத்து முன்வைப்பதே திட்டமாகும்.

முதலாளியச் சமுதாயத்தின் முரண்பாடுகளையும் இயக்கங்களையும் ஆய்வு செய்த மார்க்சும், ஏங்கெல்சும் அங்கு உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடும், அடித்தளத்திற்கும் மேல்கட்டுமானத்திற்கும் இடையிலான முரண்பாடும், முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான வர்க்கப்போராட்டமாக அரசியல், பொருளாதார, கலாச்சார அரங்குகளில் வெடிப்பதைக் கண்டறிந்தனர். முதலாளிய உற்பத்தி உறவுகளும், மேல்கட்டுமானமும் சமுதாய வளர்ச்சிக்குத் தடையாகிவிட்ட பின்னும் அவற்றைக் கட்டிக்காக்க நின்ற முதலாளிய வர்க்கம் வரலாற்று வகையில் தவிர்க்கமுடியாமல் வீழ்ச்சியை நோக்கிச் செல்வதையும், முன்னேறிய சோசலிச உற்பத்தி உறவு களையும்,மேல்கட்டுமானத்தையும் நிறுவுவதற்காக முதலாளி வர்க்கத்துடன் மோதும் பாட்டாளி வர்க்கம் வரலாற்று வகையில் தவிர்க்க முடியாமல் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதை நோக்கி வளருவதையும் கண்டறிந்தனர்.

ஆனால் சில நாடுகளில் முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவ வர்க்கத்தை முற்றாகத் துடைத்தெறியாமல் அதனுடன் சமரசம் செய்து கொண்டது. முதலாளிய வர்க்கத்துடன் கூடவே தோன்றிய பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சியும், போராட்டமும் 'பாரிஸ் கம்யூன்' எழுச்சியும் முதலாளிய வர்க்கத்தை அச்சுறுத்தின. இதனால் முதலாளிய வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தை எதிர்ப்பதற்கும், ஒடுக்குவதற்கும் நிலப்பிரபுத்துவ வர்க்கத்துடன் சமரசம் செய்து கொண்டது. பாட்டாளி வர்க்கத்தால் தனது வாழ்வுக்கே அபாயம் தோன்றுவதைத் தவிர்ப்பதற்காக முதலாளி வர்க்கம் இவ்வாறு நிலப்பிரபுத்துவத்துடன் சமரசமாகச் சென்றது. ஆனால் அதுவே முதலாளியத்தின் சுதந்திரமான, விரிவான, விரைவான வளர்ச்சிக்குத் தடையாக மாறியது. நிலப்பிரபுத்துவ உறவுகள் முற்றாகத்

படிப்பகம்

www.padippkam.com



துடைத்தெறியப்படாமல் முதலாளியம் சுதந்திரமாக, விரிவாக, விரைவாக வளர்வது சாத்தியமில்லை. பாட்டாளி வர்க்கமும் பரந்துபட்ட மக்களும் இந்நிலையில் முதலாளியத்தால் பட்ட துயரைவிட முதலாளியத்தின் போதாக்குறையான வளர்ச்சியினாலேயே அதிகத் துயரடைந்தனர். முதலாளியம் நிலப்பிரபுத்துவத்துடன் சமரசம் செய்துகொண்டு புரட்சியினால் அன்றி சீர்திருத்த வழிகளில் முதலாளியத்தை நிறுவ முயன்றதால் அரைநிலப்பிரபுத்துவ உறவுகள் நீண்டகாலம் நீடித்து மக்களை கடும் இன்னலுக்கு உள்ளாக்கியது. தொடர்ந்து சமுதாய வளர்ச்சிக்கு முதலாளிய உறவுகளல்ல நிலப்பிரபுத்துவ உறவுகளே இதனால் பெரும் தடையாக இருந்தன. இத்தகைய நாடுகளில் நிலப்பிரபுத்துவ உறவுகளையும் அவற்றைக் கட்டிக்காக்கும் மேல்கட்டுமானத்தையும், உடைத்தெறிந்து முதலாளியத்தின் சுதந்திரமான, விரிவான, விரைவான வளர்ச்சிக்கு வகை செய்யும் உற்பத்தி உறவுகளையும், மேல்கட்டுமானத்தையும் நிறுவ பாட்டாளி வர்க்கமும் பரந்துபட்ட மக்களும் முன்னின்றனர். ஆனால், நிலப்பிரபுத்துவ வர்க்கங்களும் அவற்றுடன் சமரசமாகச் சென்ற முதலாளிய வர்க்கமும், அரைநிலப்பிரபுத்துவ உறவுகளையும் அவற்றைக் கட்டிக்காக்கும் மேல்கட்டுமானத்தையும் காப்பதில் உறுதியாக நின்றன. இவற்றில் இயல்பாகவே அரைநிலப்பிரபுத்துவ உறவுகளைக் கட்டிக்காக்கும் வர்க்கங்கள் வரலாற்றுவகையில் தவிர்க்கமுடியாமல் வீழ்ச்சியை நோக்கியும் அவற்றை உடைத்தெறிய நிற்கும் வர்க்கங்கள் தவிர்க்க முடியாமல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதை நோக்கியும் சென்றன.(எடுத்துக்காட்டு ஜார்கால ரசியா)

ஏகாதிபத்தியக் காலகட்டத்தில் முதலாளிய வளர்ச்சியே ஏற்படாத பின்தங்கிய நாடுகளில் (எடுத்துக்காட்டு சீனா, இந்தியா) ஏகாதிபத்தியங்கள் தமதுஅரசியல், பொருளாதார ஆதிக்கங்களைச் செலுத்தத் தொடங்கின. ஏகாதிபத்தியங்களின் (காலனி) ஆதிக்கத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த மக்களை ஒடுக்கவும் தொடர்ந்து தமது சுரண்டலையும், ஆதிக்கத்தையும் நிலைநிறுத்திக் கொள்ளவும் ஏகாதிபத்தியங்கள் இந்த நாடுகளின் பிற்போக்கான நிலப்பிரபுத்துவ மற்றும் முதலாளியத்திற்கு முந்திய வர்க்கங்களுடன் கூட்டமைத்துக் கொண்டன. ஏகாதிபத்திய மூலதன ஆதிக்கம் இந்நாடுகளில் முதலாளியம் தோன்றுவதற்கும், ஓரளவு வளர்வதற்கும் தூண்டுதலாக இருந்திருப்பினும் ஏகாதிபத்தியங்கள் தமது சுரண்டலையும், ஆதிக்கத்தையும் தொடரவும் கட்டிக்காக்கவும் இந்நாடுகளில் முதலாளியம் சுதந்திரமாகவும், விரிவாகவும், விரைவாகவும் வளர எல்லா வகையிலும் தடைசெய்தது.



மேலும் அது நிலப்பிரபுத்துவ மற்றும் முதலாளியத்திற்கு முந்திய வர்க்கங்களுடன் கூட்டமைத்துக் கொண்டதானது முதலாளியத்தின் சுதந்திரமான, விரிவான, விரைவான வளர்ச்சிக்கு மேலும் தடை செய்தன. இந்நிலையில் இந்நாடுகளின் சமுதாய வளர்ச்சிக்கு ஏகாதிபத்திய மூலதன ஆதிக்கமும், அரை நிலப்பிரபுத்துவ உறவுகளும் அவற்றைக் கட்டிக்காக்கும் மேல் கட்டுமானமும் (காலனிய, அரைக்காலனிய, நவீன காலனிய அல்லது பிறவகை சார்பு) தடையாகி இருந்தன. இவற்றை உடைத்தெறியாமல் சமுதாயம் மேற்கொண்டு வளரவியலாது. இந்நாடுகளில் உள்ள பாட்டாளி வர்க்கமும் பரந்துபட்ட மக்களும் இவற்றை உடைத்தெறிந்துவிட்டு சுதந்திரமான, விரிவான, விரைவான முதலாளியத் தேசிய உற்பத்திக்கு வகை செய்யும் உற்பத்தி உறவுகளையும், மேல் கட்டுமானத்தையும் நிறுவப் போராடுகின்றனர். ஏனெனில் இந்நாடுகளின் மக்கள் முதலாளிய வளர்ச்சியினால் உறும் துயரைவிட போதாக் குறையான முதலாளிய வளர்ச்சியினால்தான், முதலாளிய வளர்ச்சிக்குத் தடையாக உள்ள உறவுகளினால்தான் அதிகத் துயரடைகிறார்கள். அதே நேரத்தில் ஏகாதிபத்தியமும் நிலப்பிரபுத்துவம் மற்றும் அனைத்துப் பிற்போக்கு வர்க்கங்களும் அரைநிலப்பிரபுத்துவ உறவுகளையும், ஏகாதிபத்திய மூலதன ஆதிக்கத்தையும் தொடர்ந்து வைத்திருக்கவும் அதற்கான மேல் கட்டுமானத்தைக் காக்கவும் நிற்கின்றன. இதனால் ஒரு பக்கம் ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ வர்க்கங்களும் மறுபக்கம் பாட்டாளி வர்க்கமும், பரந்துபட்ட மக்களும் கொண்ட வர்க்கப் போராட்டம் சகல அரங்குகளிலும் இத்தகைய நாடுகளில் வெடித்தெழுகிறது. இவற்றில் நிலப்பிரபுத்துவ, ஏகாதிபத்திய வர்க்கங்கள் தவிர்க்க முடியாமல் வரலாற்று வகையிலான வீழ்ச்சியை நோக்கியும், பாட்டாளி வர்க்கமும் பரந்துபட்ட மக்களும் தவிர்க்க முடியாமல் வரலாற்று வகையில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதை நோக்கியும் செல்கின்றன.

மார்க்சிய (வரலாற்றியல் பொருள்முதல்வாத) கோட்பாடு இவ்வாறு ஒவ்வொரு சமுதாயத்திலும் வரலாற்று வகையில் தவிர்க்க முடியாமல் வீழ்ச்சியுறும் வர்க்கங்களையும் தவிர்க்க முடியாமல் வரலாற்று வகையில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதை நோக்கி வளரும் வர்க்கங்களையும் பற்றி ஆய்வு செய்து முன் வைக்கிறது.

இவ்வாறு **வரலாற்று வகையில் தவிர்க்க முடியாமல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதை நோக்கி வளரும் வர்க்கங்களின் வரலாற்று வகையிலான நோக்கங்களை இலட்சியங்களை விஞ்ஞானப் பூர்வமாகத் தொகுத்து முன் வைப்பதே திட்டமாகும்.**

படிப்பகம்

www.padippkam.com



இன்றைய சகாப்தத்தில் எல்லா நாடுகளிலுமே பாட்டாளி வர்க்கம் வரலாற்று வகையில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதை நோக்கி வளரும் வர்க்கமாக இருக்கிறது என்பதில் ஐயமில்லை. இவ்வர்க்கத்தின் நோக்கம் சோசலிசத்தையும் (பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ) பின்னர் கம்யூனிசத்தையும் நிறுவுவதாகும். எனவே இது பாட்டாளி வர்க்கக் கட்சியின் திட்டமாக (அதிகபட்சம்) இருக்கிறது.

ஆனால் நாம் முன்னர் கண்டது போல் முதலாளியத்தின் சுதந்திரமான, விரிவான, விரைவான வளர்ச்சிக்கு நிலப்பிரபுத்துவம் மட்டுமோ நிலப்பிரபுத்துவமும் ஏகாதிபத்தியமும் சேர்ந்தோ தடையாக இருக்கும் நாடுகளில் இவற்றை வீழ்த்தாமல் பாட்டாளி வர்க்கம் சோசலிசத்தை நோக்கி முன்னேற – பௌதீக நிலைமைகளை உருவாக்க முடியாது. எனவே இத்தகைய நாடுகளில் சோசலிசம் என்பது பாட்டாளி வர்க்கத்தின் அதிக பட்ச நோக்கமாகவும் (திட்டமாகவும்) அதற்கு பௌதீக நிலைமைகள் உருவாகவே தடையாக இருக்கும் நிலப்பிரபுத்துவம் அல்லது நிலப்பிரபுத்துவம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றை வீழ்த்தி விட்டு ஜனநாயகத்தை நிறுவுவது குறைந்த பட்ச நோக்கமாகவும் (திட்டமாகவும்) இருக்கிறது. இதனால் புரட்சியும் இரண்டு கட்டங்களைக் கொண்டதாக இருக்கிறது. அதிக பட்சத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு சோசலிசப் புரட்சிக் கட்டம் என்றும் அதற்குள்ளாக குறைந்த பட்சத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஜனநாயகப் புரட்சிக் கட்டம் என்றும் குறிப்பிடப் படுகிறது.

பாட்டாளி வர்க்கம் தனது குறைந்த பட்சத் திட்டமாக வைத்து நிறைவேற்றும் ஜனநாயகப் புரட்சி முதலாளிய ஜனநாயகப் புரட்சியே எனினும் அது பழைய வகைப்பட்ட முதலாளிய ஜனநாயகப் புரட்சியல்ல. அதாவது முதலாளிகள் ஆட்சியை – சட்டமியற்றும் அமைப்பும் அதை நிறைவேற்றும் அமைப்பும் தனித்தனியே இருப்பது, மக்களிடமிருந்து பிரிந்த இராணுவம் ஆகியவற்றைக் – கொண்டு வரும் ஜனநாயகப் புரட்சியல்ல. இது முதலாளிகளுக்கு மட்டுமே ஜனநாயகம் வழங்கக் கூடியதாகும். மாறாகப் பாட்டாளி வர்க்கம் நடத்தும் ஜனநாயகப் புரட்சி பாட்டாளிகளின் தலைமையில் தொழிலாளிகள் – விவசாயிகள் கூட்டை அடிப்படையாகக் கொண்டு பரந்துபட்ட புரட்சிகர மக்களின் ஆட்சியை நிறுவுவதும், சட்டமியற்றுவதும், நிறைவேற்றுவதும் மக்கள் பிரதிநிதிகளின் அதிகாரத்தில் இருப்பதும், மக்களிடமிருந்து பிரியாத இராணுவத்தைக் கொண்டதுமான புதிய வகை ஜனநாயகத்தைக் கொண்டு வருவதாகும். உண்மையிலேயே பெரும்பான்மை மக்களின்



ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். எனவேதான் பாட்டாளி வர்க்கம் தனது குறைந்த பட்சத் திட்டமாக முன் வைத்து நடத்தும் ஜனநாயகப் புரட்சி புதிய ஜனநாயகப் புரட்சி எனக் கூறப்படுகிறது.

நிலப்பிரபுத்துவத் தளைகளில் முதலாளியத்தின் சுதந்திரமான, விரிவான, விரைவான வளர்ச்சிக்குத் தடையேற்படும் போது பாட்டாளி வர்க்கத் திட்டம் சோசலிசம் (அதிக பட்சத் திட்டம்), ஜனநாயகம் (குறைந்த பட்சத் திட்டம்) என இரண்டு பகுதிகளாக இருப்பதைப் பற்றி ஸ்டாலின் கூறுகிறார்.

''மார்க்சியக் கோட்பாடு அளிக்கும் உண்மை நிலவரங்களை அடிப்படையாகக் கொண்டு மார்க்சியத் திட்டம் பாட்டாளி வர்க்கத்தின் நோக்கங்களைத் தீர்மானிக்கிறது. அவற்றை விஞ்ஞானப்பூர்வமான திட்டமாக உருவாக்கி அளிக்கிறது. திட்டம் முதலாளிய வளர்ச்சிப் போக்கு முழுவதையும் கணக்கில் கொண்டு முதலாளியத்தைத் தூக்கி எறிந்து சோசலிச உற்பத்தியைத் திட்டமிடலாம் அல்லது முதலாளிய வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட இடைக் கட்டத்தை மட்டும் கணக்கில் கொள்ளலாம். எடுத்துக் காட்டாக நிலப்பிரபுத்துவ எதேச்சதிகார அமைப்பின் மிச்ச சொச்சங்களைத் துடைத்தொழித்து முதலாளியத்தின் சுதந்திரமான வளர்ச்சிக்கான சூழ்நிலைகளைப் படைப்பதாக இருக்க லாம். இதற்கேற்ப திட்டம் இரு பகுதிகளை – அதாவது குறைந்தபட்சத் திட்டத்தையும், அதிக பட்சத் திட்டத்தையும் உள்ளடக்கி இருக்கலாம்.'' (ஸ்டாலின் தொகுப்பு நூல் 5, பக்கம் 165)

ஜார் கால இரசியாவில் முதலாளியத்தின் சுதந்திரமான, விரிவான, விரைவான வளர்ச்சிக்குத் தடையாய் இருந்த நிலப் பிரபுத்துவ எதேச்சதிகாரத்தை – நிலப்பிரபுத்துவ மிச்சங்களை (அரை நிலப்பிரபுத்துவம்) துடைத்தெறிந்து தொழிலாளி மற்றும் விவசாயிகளின் மக்கள் ஜனநாயகச் சர்வாதிகாரத்தை நிறுவுவதைக் குறைந்த பட்சத் திட்டமாகவும், முதலாளியத்தை முற்றாகத் துடைத்தொழித்து சோசலிசத்தையும், பின்னர் கம்யூனிசத்தையும் நிறுவுவதை அதிக பட்சத் திட்டமாகவும், ரசியப் பாட்டாளி வர்க்கம் கொண்டிருந்தது.

புரட்சிக்கு முந்திய சீனத்தில் ஏகாதிபத்தியத் தளைகளும், நிலப்பிரபுத்துவ உறவுகளும், சுதந்திரமான, விரிவான, விரைவான முதலாளிய வளர்ச்சிக்குத் தடையாக இருந்தன. சீனப் பாட்டாளி வர்க்கம் சோசலிசத்தை நோக்கி முன்னேற வேண்டுமானால் இவற்றை

படிப்பகம்

www.padippkam.com



முற்றாகத் துடைத்தெறிவது அவசியமாக இருந்தது. ஏகாதிபத்தியத் தளைகளையும் நிலப்பிரபுத்துவ உறவுகளையும் முற்றாகத் துடைத்தெறிவதன் மூலமே சோசலிசப் புரட்சிக்கான பௌதீக நிலைமைகளை உருவாக்க முடியும். எனவே, சீனப் பாட்டாளி வர்க்கம் சோசலிசத்தையும் கம்யூனிசத்தையும் தனது அதிகபட்சத் திட்ட மாகவும், ஏகாதிபத்தியத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் துடைத் தொழித்துப் புதிய ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றுவதைத் தனது குறைந்தபட்சத் திட்டமாகவும் கொண்டிருந்தது.

மாவோ கூறினார் :

" இன்றைய சீனச் சமுதாயத்தின் காலனிய, அரைக்காலனிய, அரைநிலப்பிரபுத்துவத் தன்மைக்கேற்ப சீனப்புரட்சி இரு கட்டங்களால் பிரிக்கப்பட வேண்டும். முதற்கட்டம் காலனி, அரைக்காலனி அரைநிலப்பிரபுத்துவச் சமுதாய அமைப்பை வீழ்த்தி சுதந்திரமான ஜனநாயகச் சமுதாயத்தைப் படைப்பதாகும். இரண்டாவது கட்டம் புரட்சியை முன்னெடுத்துச் சென்று சோசலிசச் சமுதாயத்தைப் படைப்பதாகும்."

"முதற்கட்டம் தனது சமூகக் குணாம்சத்தின்படி அடிப்படையில் இன்னமும் முதலாளிய ஜனநாயகத் தன்மைகளையே கொண்டிருக்கிறது. அப்புரட்சியின் முதல் கட்டத்தின் ஸ்தூலமான, திட்டவட்டமான தேவைகள் முதலாளியத்தின் வளர்ச்சிப் பாதையில் உள்ள தடைகளை அகற்றுவதாகவே உள்ளது"

(புதிய ஜனநாயகம்)

மேலும், புதிய ஜனநாயகப் புரட்சிக்கான திட்டத்தை வரையறுத்த மாவோ பின்வருமாறு கூறினார்.

"இதுதான் கம்யூனிஸ்டுகளாகிய நாம் இக்கட்டத்திற்கேற்ப வகுத்துள்ள பொதுத்திட்டம் அல்லது அடிப்படைத் திட்டமாகும். நமது எதிர்கால அல்லது அதிகபட்சத் திட்டமாகிய சோசலிசம் அல்லது கம்யூனிசம் போன்று (இக்கட்டத்திற்கேற்றபடி) நமது குறைந்தபட்சத் திட்டமாகும்"

(கூட்டரசாங்கம் பற்றி)

புரட்சியின் கட்டம் மாறுவது என்பது ஒரு சமுதாயத்தின் அடித்தளமும் அதன்மீது எழுப்பப்பட்டுள்ள மேல்கட்டுமானமும் மாறுவதால் ஏற்படுவதாகும்.



குறிப்பாகச் சொன்னால் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் வளர்ச்சியின் நிகழ்ச்சிப்போக்கையும், அதன் சாராம்சத்தையும் தீர்மானித்த அடிப்படை முரண்பாடுகள் முடிவுறுவதையும் புதிய அடிப்படை முரண்பாடுகள் (புதிய சமுதாய வளர்ச்சியின் நிகழ்ச்சிப்போக்கையும். அதன் சாராம்சத்தையும் தீர்மானிக்கின்ற முரண்பாடுகள்) தோன்றுவதையும் குறிக்கிறது. புரட்சிக் கட்டங்களில் மாற்றம் அதாவது அந்தக் கட்டத்திற்கான புரட்சி என்பது இந்த அடிப்படை முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான அரசியல் அதிகார மாற்றத்தையே பிரதானமாகக் குறிப்பிடுகிறது. அதாவது உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்குத் தடையாகிவிட்ட உற்பத்தி உறவுகளையும், மேல்கட்டுமானத்தையும் கட்டிக்காக்கும் வர்க்கங்களை அதிகாரத்தி லிருந்து வீழ்த்திவிட்டுப் புதிய உற்பத்தி உறவுகளையும் மேல் கட்டுமானத்தையும் நிறுவுவதற்காக நிற்கும் வர்க்கங்கள் அதிகாரத்திற்கு வருவதையே குறிக்கிறது.

# 2

# குறிப்பான திட்டம்

## (SPECIFIC PROGRAMME)

கட்சி குறைந்தபட்சத் திட்டத்தை (ஜனநாயகத்திற்கான திட்டம்) அல்லது அதிகபட்சத் திட்டத்தை (சோசலிசத்திற்கான திட்டம்) முன்வைத்து புரட்சி இயக்கத்திற்குத் தலைமை ஏற்று நடத்திக் கொண்டிருக்கும்போது புரட்சி இயக்கத்தில் ஏற்படும் பல்வேறு இடைக்கட்டங்களுக்கு ஏற்ப குறிப்பான திட்டங்களை முன்வைக்கிறது. புரட்சியின் கட்டம் முழுமைக்கும் புரட்சியின் நண்பர்கள் யார், எதிரிகள் யார் என்பதையும் சமூக ஆய்விலிருந்து கட்சி தீர்மானித்து விடுகிறது. ஆனால், எதார்த்த நிலையில் பருண்மையாக அரசியல் அரங்கில் வர்க்கச் சேர்க்கைகள் எப்போதும் ஒரே மாதிரியாக அமைவதில்லை. புரட்சிகர வர்க்கங்களுக்கும் எதிர்ப்புரட்சிகர வர்க்கங்களுக்கும் இடையிலான முரண்பாடு கூர்மையடைவதினாலோ, எதிர்ப்புரட்சிகர வர்க்க முகாமிலேயே முரண்பாடு கூர்மையடைவதனாலோ அல்லது சர்வதேசிய அரசியல் சக்திகளின் பலாபலங்களில் ஏற்படும் மாற்றங்களினாலோ புரட்சியின் நட்புச் சக்திகளின் மற்றும் எதிர்ச்சக்திகளின் அணிவகுப்பும் சமனீடும் மாறுபடுகின்றன.

படிப்பகம்

www.padippkam.com



எடுத்துக் காட்டாக எதிரிகளுக்கு இடையிலான முரண்பாடு கூர்மையடைந்து ஒரு பிரிவு மற்றொரு பிரிவைப் பலாத்காரமாகத் தூக்கியெறிய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி இருக்கலாம் அல்லது எதிர்ப் புரட்சிச் சக்திகளிலேயே ஒரு பிரிவு புரட்சியின் பிரதான எதிரியாகி இருக்கலாம். இத்தகைய நிலையில் உடனடி பிரதான எதிரியைத் தனிமைப் படுத்தி வீழ்த்துவதும், அதற்காக அதிக பட்ச சக்திகளைப் புரட்சி முகாமில் ஐக்கியப் படுத்திக் கொள்வதும் புரட்சியை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கான சரியான அணுகு முறையாகும். எதிரியை ஒவ்வொருவராகத் தனிமைப் படுத்தி வீழ்த்துவது புரட்சிகரச் சக்திகளின் பலத்தைப் படிப்படியாக அதிகரிப்பது என்பது இதில் சாத்தியமாகும். இத்தகைய சூழ்நிலையில் குறைந்த பட்ச அல்லது அதிக பட்சத் திட்டம் போதுமானதாய் இல்லை என்பதால் பாட்டாளி வர்க்கக் கட்சி குறிப்பான திட்டத்தை முன் வைத்து பரந்துபட்ட புரட்சிகர ஐக்கிய முன்னணியைக் கட்டுகிறது. குறிப்பான திட்டத்தின் அடிப்படையிலான ஐக்கிய முன்னணி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலம் குறைந்த பட்ச அல்லது அதிக பட்சத் திட்டத்தை நிறைவேற்ற முடியாது. இந்த ஐக்கிய முன்னணி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலம் அல்லது அரசியல் அதிகாரத்திற்காகப் போராடுவதன் மூலம் எதிர்ப் புரட்சிச் சக்திகளில் ஒரு பிரிவு வீழ்த்தப்படும். மொத்தத்தில் எதிர்ப் புரட்சிச் சக்திகளில் ஒரு பிரிவு பலவீனமடையும். அதே நேரத்தில் பரந்துபட்ட மக்களின் அதிகாரம் மற்றும் ஆயுதமேந்தும் உரிமையை எதிர்ப் புரட்சிகரப் பிரிவுகளில் ஒன்றே ஏற்றுக் கொண்டிருக்கும் என்பதால் மக்கள் சக்தியின் பலம் முன்னெப்போதும் விடப் பெருகியிருக்கும்; புரட்சியின் முன்னணிக்குக் கொண்டு வரப்பட்டிருக்கும். இது எஞ்சிய எதிர்ப் புரட்சிப் பிரிவையும் எளிதில் வீழ்த்துவதற்கு மக்களுக்கு அதிக வாய்ப்பைக் கொடுத்து விடுகிறது.

எனவே குறிப்பான திட்டம் என்பது உற்பத்தி உறவுகளில் உற்பத்தி முறையில் மாற்றத்தைக் கொண்டு வருவதாய் இருப்பதில்லை. மாறாக எதிர்ப் புரட்சிப் பிரிவுகளிலேயே அவற்றுக்கிடையிலான முரண்பாட்டின் காரணமாகப் புரட்சிகர முகாமுக்கு வரும் பிரிவை உடனடியாக அழிப்பதை நிறுத்தி வைப்பதாகவும் அவற்றின் வாழ்வை அங்கீகரிப்பதாகவும் இருக்கும். அதே நேரத்தில் புரட்சிகர முகாமில் இணையும் அப்பிரிவு, மக்களின் ஆயுதமேந்தும் உரிமை, அரசியல் அதிகாரம் மற்றும் ஜனநாயக உரிமைகளை அங்கீகரிப்பதுடன் மக்கள் மீதான தனது சுரண்டல் ஆதிக்கங்களைக் கட்டுப் படுத்திக் கொள்ள வேண்டியிருக்கும்.



இத் திட்டத்தின் அடிப்படையில் பிரதான எதிரி வீழ்த்தப்பட்டு அரசியல் அதிகாரம் கூட்டாகக் கைப்பற்றப்படும் போது குறைந்த பட்ச அல்லது அதிக பட்சத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வர்க்கப் போர் மேலும் தீவிரமாக வெளிப்படும் என்பது வெளிப்படை. மக்களின் அரசியல் அதிகாரம், ஆயுதமேந்தும் உரிமை மற்றும் ஜனநாயக உரிமைகளால் இப்போராட்டத்தில் மக்களின் வெற்றி தவிர்க்க முடியாததாகும். எதிரிகளின் ஒரு பிரிவினரை எதிர்த்துப் போராடிப் பெற்ற ஜனநாயக உரிமைகளை மற்றொரு பிரிவினருக்கும் எதிரான போராட்டத்திற்குப் பயன்படுத்துவது என்பது ஒரு தோளில் உள்ள துப்பாக்கியை மறு தோளுக்கு மாற்றுவது போன்றதுதான்.

எனவே, குறிப்பான திட்டம் வைத்துச் செயல்படுவது அதிக பட்ச மக்களைப் புரட்சியின் பக்கம் திரட்டுவதற்கும் எதிரியை அதிக பட்சம் பலவீனப் படுத்துவதற்கும் அவசியமாகும். இவ்வாறு செயல்படுவது குறைந்த பட்ச அல்லது அதிக பட்சத் திட்டத்தை நிறைவேற்றுவதைக் கைவிடுவதோ தள்ளிப் போடுவதோ அல்ல. மாறாக, நிலவும் புற நிலைமைகளைப் புரிந்து கொண்டு சரியான முறையில் குறைந்த பட்ச அல்லது அதிக பட்சத் திட்டத்தை நிறைவேற்றுவதை நோக்கி உறுதியாக முன்னேறுவதாகும்.

எடுத்துக் காட்டாக, புரட்சிக்கு முந்திய சீனத்தில், ஜப்பான் ஏகாதிபத்தியம் ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுத்து முழுக் காலனியாக்க முயன்ற போது சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நாற்பது அம்சம் கொண்ட குறிப்பான திட்டத்தை முன் வைத்தது. அது உற்பத்தி உறவுகளில் மாற்றத்தைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டதல்ல. மாறாக, எதிரிகளை மேலும் மேலும் பலவீனப்படுத்துவது புரட்சிகரச் சக்திகளை மேலும் மேலும் பலப்படுத்துவது அதன் மூலம் புரட்சியின் இறுதி வெற்றியை மேலும் அருகில் கொண்டு வருவது என்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டதாகும். உண்மையில் ஜப்பானிய ஏகாதிபத்திய எதிர்ப்பு யுத்தத்தின் போது சீனக் கம்யூனிஸ்ட் கட்சி முன் வைத்த குறிப்பான திட்டம் சீனப் புரட்சியின் இறுதி வெற்றியை மேலும் அருகில் கொண்டு வந்தது.

சீனத்தில் புதிய ஜனநாயகப் புரட்சிக் கட்டத்திற்குள்ளாகவே வெவ்வேறு குறிப்பான திட்டங்கள் வைக்கப்பட்டது பற்றி மாவோ கூறியது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

''இந்தப் பொதுத் திட்டத்தின் அடிப்படையில் நமது கட்சி ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒரு குறிப்பான திட்டத்தையும்

படிப்பகம்

www.padippkam.com



கொண்டிருந்தது. முதலாளிய ஜனநாயகப் புரட்சிக் கட்டம் மாறாதிருந்த பல பத்தாண்டுகளுக்கும் நமது புதிய ஜனநாயகப் பொதுத்திட்டம் மாறவில்லை. ஆனால் இக்கட்டத்தில் ஒவ்வொரு இடைக்கட்டத்திலும் (Phase) நிலைமைகள் மாறின. அதற்கேற்ப இயல்பாகவே நமது குறிப்பான திட்டமும் மாறியது. எடுத்துக்காட்டாக வடக்குப் படையெடுப்பு, விவசாயப் புரட்சி யுத்தம், ஜப்பானிய எதிர்ப்பு யுத்தம் ஆகிய மூன்று காலகட்டங்களிலும் நமது புதிய ஜனநாயகப் பொதுத்திட்டம் மாறவில்லை. ஆனால், இந்த மூன்று காலகட்டங் களிலும் நமது நண்பர்களும் எதிரிகளும் மாறியதால் நமது குறிப்பான திட்டம் இக்காலகட்டங்களில் மாற்றத்திற்குள்ளாகியது''

(கூட்டரசாங்கம் பற்றி – மாவோ)

இவ்வாறு புரட்சியின் ஒரு கட்டத்திற்குள்ளாகவே புரட்சி, எதிர்ப்புரட்சி சக்திகளின் பலாபலம் மற்றும் அணிவகுப்பு வர்க்கச் சேர்க்கையில் ஏற்படும் மாற்றங்களின் காரணமாக குறிப்பான திட்டங்கள் வெவ்வேறாக வைக்க நேரலாம். எனினும் இவற்றுக்கெல்லாம் ஒரே நோக்கமே உண்டு. அதாவது புரட்சியின் வளர்ச்சியினூடாகவே எதிரியை மேலும் மேலும் பலவீனப்படுத்துவது, புரட்சிகரச் சக்திகளை மேலும் மேலும் பலப்படுத்துவது அதன் மூலம் புரட்சியின் இறுதி வெற்றியை அருகில் கொண்டுவருவது என்பதே அது.

# 3

# மூலவுத்தி

## (STRATEGY)

பாட்டாளி வர்க்கக் கட்சி மார்க்சியக் கோட்பாட்டின் ஒளியில் திட்டம் வகுத்துக் கொண்டபின் புறநிலையில் நடக்கும் வர்க்கப் போராட்டத்திற்கு உணர்வுப்பூர்வமாகத் தலைமையளித்து வழி நடத்துவதன் மூலம் தனது திட்டத்தை விரைந்தும் அதிக இழப்பின்றியும் நிறைவேற்றுகிறது. அதற்கு **முதலாவதாக**, பாட்டாளி வர்க்கமும் பாட்டாளி வர்க்கத்தின் கூட்டாளியாய் இருக்கும் பிற வர்க்கங்களும் எந்த வர்க்கங்களைத் தமது பிரதான தாக்குதல் திசையாகக் கொள்ள வேண்டும் என்பதை தீர்மானிக்கிறது. அரசியல் அதிகாரம் யார் கையில் இருக்கிறது என்பதை வைத்து இதைத் தீர்மானித்துக் கொள்கிறது. **இரண்டாவதாக**, தனது வர்க்கமும் தனது வர்க்கக் கூட்டாளிகளாய் இருக்கும் பிற வர்க்கங்களும் எதிரி வர்க்கங்களை வீழ்த்தி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக நடக்கும் வர்க்கப் போராட்டத்தில் எவ்வாறு அணி வகுத்து நிற்க வேண்டும் என்பதைப் பற்றித் திட்டமிடுகிறது. இதில் ஒவ்வொரு வர்க்கத்தின் வரலாற்று வகையிலான பாத்திரத்தையும், இயல்பையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது. **மூன்றாவதாக**, வர்க்க யுத்தத்தில் வர்க்கப் படைகள் தாக்குதல் திசையை நோக்கிச் செல்ல வேண்டிய பாதையைத் தெளிவாக வகுத்துக் கொள்கிறது. இதன் மூலம் வர்க்கப் படைகள் வர்க்க யுத்தத்தில் ஈடுபடாமல் வர்க்க எதிரிகளுடன் சமரசப்படுத்த முயலும் சக்திகளை அம்பலப்படுத்தித் தனிமைப்படுத்த வழி வகுத்துக் கொள்கிறது. இவ்வாறு, பாட்டாளி வர்க்கக் கட்சி யுத்தத்தின் போக்கில் பெரும் பகுதியை (பத்தில் ஒன்பது பங்கை) முன்னதாகவே தீர்மானித்து விடுகிறது. இதன் மூலம் தவிர்க்கக் கூடிய இழப்புகளைத் தவிர்த்து யுத்தத்தை அதிக பட்ச சாதகமான பலன்களுடன் முடிவுக்குக் கொண்டு வருகிறது. இத்தகைய முழுமையான திட்டத்தையே மூலவுத்தி என்கிறோம்.



இதைத்தான் தோழர் ஸ்டாலின் கூறினார் : ''மூலவுத்தி என்பது மார்க்சியத் திட்டத்தால் வழி காட்டப்படுவது. அது மோதிக் கொள்ளும் சக்திகளில் உள் நாட்டு, வெளி நாட்டுச் சக்திகளின் – பலாபலன்களைக் கணக்கிட்டு அதன் அடிப்படையில் புரட்சிகரப் பாட்டாளி வர்க்க இயக்கம் மேற்கொள்ள வேண்டிய பொதுத் திசையையும் பொது வழியையும் வரையறுக்கிறது. உருவாகும் நிலையிலும், வளரும் நிலையிலும் இயக்கத்தின் மிகமிக அதிக பட்ச சாதக விளைவுகளை ஏற்படுத்தும் கண்ணோட்டத்துடன் மூலவுத்தி வகுக்கப்படுகிறது. இவற்றிற்கேற்ப பாட்டாளி வர்க்கத்தினதும், அதன் கூட்டாளிகளினதும் சக்திகளைச் சமூகப் போராட்ட முன்னணியில் ஒதுக்கும் வரை படத்தை அளிக்கிறது. (இது சக்திகளின் பொதுவான அணி வகுப்பாகும்)''

(ஸ்டாலின் தொகுப்பு நூல் 5, பக்கம் 64)

திட்டம் முன் வைக்கும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகப் பாட்டாளி வர்க்க இயக்கம் வகுத்துக் கொள்ளும் மூலவுத்தி மூன்று கூறுகளை உள்ளடக்கி இருக்கிறது. அவை:

1. பொதுத் திசை 2. பொது வழி 3. பாட்டாளி வர்க்கம் மற்றும் அதன் நட்பு வர்க்கங்களின் பொதுவான அணி வகுப்பு பற்றிய வரை படம்.

**1. பொதுத் திசை** (General direction) என்பது என்ன? பாட்டாளி வர்க்க இயக்கம் தனது திட்டத்தில் குறிக்கப் பட்டிருக்கும்

படிப்பகம்

www.padippkam.com



நோக்கங்களை வெற்றி கொள்ள பாட்டாளி வர்க்கமும் அதன் நட்புச் சக்திகளும் இணைந்து எந்த இலக்கை எதிர்த்து தனது பிரதான தாக்குதலைத் தொடுக்க வேண்டும் என்பது பற்றியதாகும். எடுத்துக் காட்டாக ஜார் கால இரசியாவில் பாட்டாளி வர்க்க ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றுவதற்குப் பிரதானமாக ஜார் எதேச்சதிகாரத்தைத் தூக்கி எறிவது அவசியமாக இருந்தது. எனவே, பாட்டாளி வர்க்கமும் அதன் நட்பு சக்திகளும் ஒருங்கிணைந்து தாக்குதல் தொடுக்க வேண்டிய இலக்காக ஜார் எதேச்சதிகாரமும் நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்களும் இருந்தன. புரட்சிகர இயக்கம் முழுவதும் ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றுவதற்காக ஜார் எதேச்சதிகாரத்தை வீழ்த்துவதையும், நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்களை முற்றாகத் துடைத்தொழிப்பதையும் நோக்கி மையம் கொண்டிருந்ததால் அதுவே மூலவுத்தியின் பொதுத் திசையாக இருந்தது. பிப்ரவரி 1917 புரட்சிக்குப் பின் பெரு முதலாளிகள், பெரு நிலப்பிரபுக்களின் கெரன்ஸ்கி அரசாங்கத்தைத் தூக்கியெறிவதை நோக்கியே புரட்சிகர இயக்கம் மையங் கொண்டிருந்ததால் அப்போது அதுவே மூலவுத்திப் பொதுத் திசையாக இருந்தது.

**2. பொது வழி** (General route) என்பது என்ன? பாட்டாளி வர்க்க இயக்கம் புரட்சியில் வெற்றி பெற வேண்டுமானால் புரட்சியின் பக்கம் பரந்துபட்ட மக்களை அணி திரட்டுவதும் எதிரியைத் தனிமைப் படுத்துவதும் முதல் தேவையாகும். அவ்வாறின்றி எதிரியை எதிர்த்து வெற்றிகரமான தாக்குதலைத் தொடுக்க முடியாது. ஆனால் அரசியல் சமூக அரங்கில் சில சக்திகள் பரந்துபட்ட மக்களைத் தம்பின் அணி திரட்டி வைத்துக் கொண்டு (பல்வேறு முழக்கங்கள், அமைப்புக்கள் மூலம் ) புரட்சியின் பக்கம் மக்கள் அணி திரளாமல் தடுக்கின்றன. எதிரிகளுடன், எதிர்ப் புரட்சிகர அமைப்புகளுடன் சமரசப் படுத்தி வைக்கின்றன. இத்தகைய சமரசச் சக்திகளின் அரசியல் சித்தாந்த அமைப்புப் பிடிப்புகளிலிருந்து பரந்துபட்ட மக்கள் விடுவிக்கப் படாமல் புரட்சியின் பக்கம் அவர்களை அணி திரட்டுவது என்பதும், எதிரியை எதிர்த்து போராடச் செய்வது என்பதும் சாத்தியமில்லை. எனவே, பாட்டாளி வர்க்கக் கட்சி பரந்துபட்ட புரட்சிகர மக்களை அணி திரட்டி எதிரியை எதிர்த்து தாக்குதல் தொடுப்பதற்கு இத்தகைய சமரசச் சக்திகளை அம்பலப்படுத்தித் தனிமைப் படுத்துவதும் அவை அதிகாரத்தைக் கைப்பற்றாமல் தடுப்பதும் அவசியமாகிறது. மூலவுத்திக் காலம் முழுமைக்கும் பொருந்தக் கூடிய இதற்கான சரியான கொள்கையும் தீர்மானங்களுமே பொது வழி எனப்படுகிறது.



எடுத்துக்காட்டாக, ஜார்கால இரசியாவில் ஜார் எதேச்சதிகாரத்தை தூக்கியெறிந்து ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றுவதை பாட்டாளி வர்க்கக்கட்சி தனது நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆனால் கேடட் கட்சி (மிதவாத முதலாளிய, அரைநிலப்பிரபுத்துவக் கட்சி) ஜார் எதேச்சதிகாரத்தைத் தூக்கியெறிவதை நோக்கமாகக் கொள்ளாமல் சில சமரசத் திட்டங்களை முன்வைத்து, பரந்துபட்ட மக்களை அணிதிரட்டிக் கொண்டிருந்தது. இக்கட்சியை அம்பலப்படுத்தி தனிமைப்படுத்தாமல் பாட்டாளி வர்க்கக் கட்சி புரட்சிகர மக்களைப் புரட்சிக்காகத் தன்பின் அணிதிரட்டுவதோ எதிரியை எதிர்த்து இறுதிவரை போராடச் செய்வதோ சாத்தியமில்லை. அதேபோல் 1917 பிப்ரவரி புரட்சிக்குப் பின் முதலாளிகள், நிலப்பிரபுக்களின் கெரன்ஸ்கி அரசாங்கத்தைத் தூக்கி எறிவதைப் பாட்டாளி வர்க்கக்கட்சி தனது இலக்காகக் கொண்டிருந்தது. ஆனால் மென்ஷ்விக்குகளும், சோசலிசப் புரட்சியாளர்களும் (குட்டி முதலாளியக் கட்சிகள்) அவ்வரசாங்கத்தில் பங்கெடுத்துக் கொண்டதன் மூலமும் அதற்கு ஆதரவாக இருந்ததன் மூலமும் பரந்துபட்ட புரட்சிகர மக்களை எதிரிகளுடன் சமரசப்படுத்தி வைத்தனர். எனவே, இவ்விரண்டு கட்சிகளை அம்பலப்படுத்தி தனிமைப்படுத்தாமல் புரட்சிகர மக்களைப் பெருமளவில் புரட்சியின் பக்கம் வென்றெடுப்பதோ, புரட்சியின் எதிரிகளை எதிர்த்து இறுதி வரை போராட்டம் செய்வதோ சாத்தியமில்லை. எனவே பாட்டாளி வர்க்கமும் அதன் நட்புச் சக்திகளும் கட்சித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஒருங்கிணைந்து எதிரியை எதிர்த்து தாக்குதல் தொடுக்க வேண்டுமாயின் அது சமரசச் சக்திகளை அம்பலப்படுத்தும் வழியின் மூலமாக மட்டுமே சாத்தியமாகும். எனவே புரட்சியின் எதிரியை வெற்றிகரமாகத் தூக்கி எறிவதற்கு எதிரியுடன் பரந்துபட்ட மக்களைச் சமரசப்படுத்தி வைக்கும் சக்திகளை அம்பலப்படுத்தி தனிமைப் படுத்துவதற்கும், அது அதிகாரத்திற்கு வரவிடாமல் தடுப்பதற்கும் ஒரு பொதுக்கொள்கையை பாட்டாளி வர்க்கக் கட்சி வகுத்துக் கொள்ளவேண்டும். அவ்வாறு வகுத்துக் கொள்ளப்படும் பொதுக் கொள்கையே பொதுவழி எனப்படுகிறது. இது மூலவுத்திக் காலகட்டம் முழுவதற்கும் பொருந்தியதாகும்.

**3. சக்திகளின் அணிவகுப்பு** (Disposition of forces) என்பது என்ன? மூலவுத்தி என்பது பொதுத்திசையையும், பொது வழியையும் மட்டுமின்றி வர்க்க யுத்தத்தில் பாட்டாளி வர்க்கமும் அதன் நட்புச் சக்திகளும் அணிவகுத்து நிற்கவேண்டிய முறைகளையும் வரையறுக்கிறது. ஒவ்வொரு வர்க்கத்தின் பங்கையும்

படிப்பகம்

www.padippkam.com



முக்கியத்துவத்தையும் வரையறுக்கிறது. புரட்சியின் பிரதான சக்திகளையும், துணை சக்திகளையும் கணிக்கிறது. இதுவே சக்திகளின் அணி வகுப்பு எனப்படுகிறது.

ஒரே புரட்சிக் கட்டத்தை (சோசலிசம் அல்லது ஜனநாயகப் புரட்சிக் கட்டம்) கொண்டிருப்பினும் கூட ஒவ்வொரு நாட்டிலும் அவற்றின் வரலாற்றுப் பூர்வமான காரணங்களினால் மூலவுத்தியின் வர்க்க அணி வகுப்பு ஒரே மாதிரியாக அமைவதில்லை. (பொதுத் திசையும், பொது வழியிலும் கூட அவ்வாறுதான்) எடுத்துக் காட்டாக இரசியாவில் முதலாளிய ஜனநாயகப் புரட்சிக் கட்டத்தில் பாட்டாளி வர்க்கம் தலைமைச் சக்தியாகவும், விவசாயி வர்க்கம் பிரதான நட்புச் சக்தியாகவும் இருந்தது. முதலாளிய வர்க்கம் சமரசச் சக்தியாக எதிரி முகாமில் இருந்தது. ஆனால் சீனத்தில் முதலாளிய ஜனநாயகப் புரட்சிக் கட்டத்தில் தொழிலாளி வர்க்கம் தலைமைச் சக்தியாகவும், விவசாய வர்க்கம் முக்கிய உந்து சக்தியாகவும்,தேசிய முதலாளி வர்க்கம் வென்றெடுக்கப்பட வேண்டிய ஊசலாடும் சக்தியாகவும் இருந்தது.

மேலும் மூலவுத்தி என்பது அதன் நோக்கம், தேசிய, சர்வதேசிய அளவில் நட்பு, எதிரிச் சக்திகளைப் பற்றிய மதிப்பீடு போன்றவற்றில் கட்சித் திட்டத்தால் வழிகாட்டப்படுவதாயினும் கட்சித் திட்டம் நிறைவேறும் வரையிலும் அவை ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்பதில்லை. தோழர் ஸ்டாலின் கூறியது போல் "வரலாற்றில் திருப்பங்களும், தீவிர மாற்றங்களும் ஏற்படும் போது மூலவுத்தியும் மாறுகிறது" ( தொகுதி 5, பக்கம் 65 ) ஏனெனில் பொதுத் திசையும், பொது வழியும், சக்திகளின் அணி வகுப்பும், திட்டம் மாறாமல் இருக்கும் போதே இத்தகைய சமயங்களில் மாறுகின்றன. தேசிய, சர்வதேசிய அடிப்படை முரண்பாடுகள் மாறாமல் இருக்கும் போதே அவை தீவிரமடைவதால் ஏற்படும் வரலாற்றுத் திருப்பங்களும், தீவிர மாற்றங்களும் கட்சித் திட்டம் மாறாமல் இருக்கும் போதே மூலவுத்தி மாறுவதற்குக் காரணமாகின்றன. எனினும், எப்போதும் மூலவுத்தி கட்சித் திட்டத்தால் வழி காட்டப்படுவதாகவே இருக்கிறது.

எடுத்துக் காட்டாக, ஜப்பான் ஏகாதிபத்தியம் சீனத்தைத் தனது முழுக் காலனியாக்கிக் கொள்வதற்காக 1931இல் ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுத்தபோது அது முக்கியமான வரலாற்றுத் திருப்பமாக இருந்தது. இதனால் கட்சித் திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பிரதானத் தாக்குதல் திசையாக நிலப்பிரபுத்துவம் இருந்தது மாறி ஜப்பான் ஏகாதிபத்தியம்



பிரதான தாக்குதல் திசையாயிற்று. ஜப்பான் ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்துகொள்ளும் சக்திகளை அம்பலப்படுத்தி தனிமைப்படுத்துவது பொதுவழியாக ஆயிற்று. ஜப்பானிய ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகள் அனைத்தும் புரட்சி முகாமுக்குத் தள்ளப்பட்டதால் புரட்சிகரச் சக்திகளின் பலம் மேலும் விரிவடைந்து அணிவகுப்பு மாறியது. எனினும், புதிய ஜனநாயகப் புரட்சி என்ற கட்சித்திட்டமோ சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடுகளோ அந்த வரலாற்றுத் திருப்பத்தினால் மாறவில்லை.

எனவே, சாராம்சமாக மூலவுத்தியானது கீழ்க்கண்டவற்றை வரையறுத்துக் கொள்கிறது எனலாம்.

1) கட்சியின் திட்டத்தை நிறைவேற்றும் நோக்கத்திற்காகப் பாட்டாளி வர்க்கம் அதன் நட்புச் சக்திகளுடன் இணைந்து பிரதான தாக்குதலைத் தொடுக்கவேண்டிய திசையை வரையறுத்துக் கொள்வது. (பொதுத்திசை)

2) அவ்வாறு தாக்குதலைத் தொடுப்பதற்கு எதிராக எதிரிகளுடன் பரந்துபட்ட மக்களை சமரசப்படுத்தி வைக்கும் சக்தியைத் தீர்மானித்து அதை அம்பலப்படுத்தித் தனிமைப்படுத்தவும்; அது அதிகாரத்திற்கு வருவதைத் தடுக்கவும்; சரியான கொள்கையை வரையறுத்துக் கொள்வது. (பொதுவழி)

3) பாட்டாளி வர்க்கமும், அதன் நட்புச் சக்திகளும் புரட்சியின் எதிரியை எதிர்த்த தாக்குதலைத் தொடுக்க மேற்கொள்ள வேண்டிய அணிவகுப்பு முறையை வரையறுத்துக் கொள்வது; அதாவது திட்டம் நிறைவேற்றப்படுகிற காலம் அல்லது இடைக்கட்ட காலம் முழுவதிலும் பல்வேறு வர்க்கங்களின் முக்கியத்துவம் அவற்றுக்கிடையிலான போராட்ட உறவுகள் பற்றிய வரைபடத்தை வரையறுத்துக் கொள்வது. (சக்திகளின் அணிவகுப்பு )

மூலவுத்தி என்பது பொதுத்திசை, பொதுவழியை வரையறுப்பது, போராடும் சக்திகளின் அணிவகுப்பு பற்றிய வரைபடத்தை வரையறுப்பது என்ற எல்லைக்குள் நின்று விடுவதில்லை. மாறாக அந்த வரலாற்றுத் திருப்ப காலகட்டத்திற்குள் நடக்கும் அனைத்துப் போராட்டங்களையும் நெறிப்படுத்துகிறது. நடைமுறையில் இருக்கும் செயலுத்திகளையும் நெறிப்படுத்துகிறது. செயலுத்திக்குத் தேவையான திருத்தங்களைத் தருகிறது. சேமிப்புச் சக்திகளை அதிகபட்சம் திறம்பட பயன்படுத்துவதற்குத் துணை நிற்கிறது. மூலவுத்தி பொதுத்திசையில் மாற்றம் ஏற்படாமல் இருக்கும்போதே வர்க்கச்

படிப்பகம்

www.padippkam.com



சக்திகளின் சமன்பாடுகள் மாறி அரசியல் சூழ்நிலைகள் கணிசமாக மாறினால் மூலவுத்தி பொதுத்திசைக்கு ஆதரவாகப் பொதுவழியில் நெகிழ்ந்து கொடுக்கிறது.

எடுத்துக்காட்டாக, ஜாரிசத்தின் வீழ்ச்சிக்கு முன்பு ஜாரிசத்திற்கும் முதலாளிய மிதவாதிகளுக்கும் எதிராகத் தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான கூட்டணியை போல்ஷ்விக் கட்சி எப்போதும் வலியுறுத்தி வந்தது. ஜாரிசத்தையும் முதலாளிய மிதவாதிகளையும் எதிர்த்து இடைவிடாத போராட்டத்தை நடத்தி வந்தது. பரந்துபட்ட மக்களைப் புரட்சிக்கெதிராக ஜாரிசத்துடன் சமரசப்படுத்தி வைக்கும் கேடட் கட்சியை (மிதவாத முதலாளிகளின் கட்சி) அம்பலப்படுத்தித் தனிமைப்படுத்துவதையே போல்ஷ்விக் கட்சி தனது மூலவுத்தியின் பொதுவழியாகக் கொண்டிருந்தது. எனினும் பல சமயங்களில் போல்ஷ்விக் கட்சி ஜாரிசத்திற்கு எதிராக மிதவாத முதலாளியக் கட்சிக்கு ஆதரவளித்தது; அதனுடன் கூட்டணி அமைத்தது; லெனின் கூறினார்:

''ஜாரிசத்தின் வீழ்ச்சிக்கு முன்பு இரசியப் புரட்சிகர சமூக ஜனநாயகவாதிகள் முதலாளிய மிதவாதிகளை அடிக்கடி பயன்படுத்திக் கொண்டனர். அதாவது இந்த மிதவாதிகளுடன் எத்தனையோ முறை நடைமுறை சார்ந்த சமரசங்கள் செய்து கொண்டனர்..........'' ''1905 முதலாய் போல்ஷ்விக்குகள் முதலாளிய வர்க்கத்தாருக்கும் ஜாரிசத் துக்கும் எதிராய் தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான கூட்டணியை இடையறாது ஆதரித்து வந்துள்ளனர்; ஆயினும் ஜாரிசத்துக்கு விரோதமாய் முதலாளிய வர்க்கத்துக்கு ஆதரவளிக்க மறுத்ததே இல்லை''.

(சமரசம் கூடவே கூடாதா?)

இத்தகைய நிலைமைகளில் போல்ஷ்விக் கட்சி சமரசச் சக்திகளுடன் சமரசமாகச் சென்றதன் மூலம் மூலவுத்திப் பொதுவழியில் தற்காலிக மாற்றம் ஏற்பட்டது. ஆனால், அது மூலவுத்திப் பொதுத் திசைக்கு சாதகமாகவே ஏற்பட்டது. இவ்வாறு பொதுவழியில் – பொதுத்திசை மாறாமல் இருக்கும்போதே அதற்கு சாதகமாக – மாற்றத்தைக் கொண்டுவரும் செயலுத்திகளைக் கட்சி எடுக்கும்போது மூலவுத்தி அதற்கு நெகிழ்ந்து கொடுக்கக் கூடியதாக இருக்கிறது.

அதேபோல் 1917 அக்டோபர் புரட்சி நேரத்தில் சமரசச் சக்திகளாய் இருந்த மென்ஷ்விக்குகளையும், சோசலிஸ்ட் புரட்சியாளர் களையும் அம்பலப்படுத்தி தனிமைப்படுத்துவதன் மூலம் பரந்துபட்ட மக்களைப் புரட்சியின் பின் அணி திரட்டுவதே அப்போதைய மூலவுத்திப் பொது வழியாக இருந்தது. ஆனால், பல சமயங்களில் போல்ஷ்விக் கட்சி மென்ஷ்விக்குகளுடனும் சோசலிஸ்ட்டுப் புரட்சியாளர்களுடனும் சமரசம் செய்து கொண்டது, கூட்டணி அமைத்துக் கொண்டது. லெனின் கூறினார்:



'' அக்டோபர் புரட்சி நடைபெற்ற அதே நேரத்தில் நாங்கள் குட்டி முதலாளிய விவசாய மக்களுடன் முறைப்படி இல்லாவிட்டாலும் மிக முக்கியமாக (மிகவும் வெற்றிகரமானதும் கூட) கூட்டணி வகுத்துக் கொண்டோம். சோசலிஸ்ட் புரட்சியாளர்களின் நிதித் துறை வேலைத் திட்டத்தை எந்த ஒரு மாற்றமும் இன்றி அப்படியே முழுமையாக ஏற்றுக் கொள்வதன் வாயிலாக இதனைச் செய்தோம்– அதாவது, விவசாயிகளுடன் நாங்கள் உடன்பாடுகளை விரும்பினோமே அன்றி அவர்களை நசுக்கிட ஒடுக்கிட விரும்பவில்லை என்பதை அவர்களுக்கு நிரூபித்துக் காட்டும் பொருட்டு மறுக்க முடியாததொரு சமரசம் செய்து கொண்டோம். அதே போதில், இடதுசாரி சோசலிசப் புரட்சியாளர்களுடன் அரசாங்கத்தில் பங்கு கொள்வதும் அடங்கலாக முறைப்படியானதோர் அரசியல் கூட்டணி நிறுவிக் கொள்ளலாம் என அவர்களிடம் முன் மொழிந்தோம் (விரைவில் அவ்வாறே நிறுவிக் கொண்டோம்) பிரேஸ்த்-லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கை முடிவான பின் அவர்கள் இந்த கூட்டணியை உடைத்தனர். பிறகு 1918 ஜூலையில் ஆயுதம் ஏந்திய கலகம் செய்யும் அளவுக்கும், பின்னர் எங்களை எதிர்த்து ஆயுதப் போராட்டம் நடத்தும் அளவுக்கும் சென்றனர்.''

(சமரசம் கூடவே கூடாதா?)

இத்தகைய நிலைமைகளில் போல்ஷ்விக் கட்சி சமரசச் சக்திகளுடன் சமரசமாகச் செல்லும் செயலுத்தியை நடைமுறைப் படுத்தியதன் மூலம் மேலும் அச்சக்திகளை அம்பலப்படுத்துவதற்கும் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தி புரட்சியின் பக்கம் பரந்துபட்ட மக்களை வென்றெடுப்பதற்கும் அதிக வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டது.

இவ்வாறு மூலவுத்தி நெகிழ்ந்து கொடுப்பது மூலவுத்தி வகைப் பட்ட வெற்றியை விரிவுபடுத்துவதற்கும் இன்னும் அதிக பட்ச தவிர்க்கக் கூடிய இழப்புக்களைத் தவிர்த்து புரட்சியை வெற்றியை நோக்கி முன்கொண்டு செல்வதற்கும் அதிகம் வழி வகுப்பதாக இருக்கும்.

படிப்பகம்

www.padippkam.com



# 4

# செயலுத்தி

## (TACTICS)

பிற்போக்கு வர்க்கங்களின் ஆட்சி அதிகாரத்தை வீழ்த்துவதை பொதுத் திசையாகக் கொண்டு மூலவுத்தி வகுத்துக் கொள்ளப்பட்ட பின் அதற்கெதிராக பரந்துபட்ட மக்களை – பாட்டாளி வர்க்கத்தையும் வர்க்கப் போராட்டத்தில் அதன் நட்புச் சக்திகளாய் இருக்கும் பிற வர்க்கங் களையும் வர்க்கப் பிரிவுகளையும் அணி திரட்டுவது உடனடிக் கடமையாகிறது. ஆனால், பிற்போக்கு வர்க்கங்களும் அவற்றின் ஆட்சியதிகாரமும் நீடிக்க முடியாது; வீழ்வது உறுதி என்பதை பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படை மட்டுமின்றி பாட்டாளி வர்க்கமும் பரந்துபட்ட மக்களும் உணரும் போதுதான் இது சாத்தியமாகும். இதற்குப் பிரச்சாரம், அம்பலப் படுத்துதல், கிளர்ச்சி மட்டும் போதுமானதல்ல. கூடவே மக்கள் தமது சொந்த அனுபவங்களைப் பெறுவதன் மூலமாக மட்டுமே இதனை உணர முடியும். எனவே மக்கள் தமது சொந்த அனுபவத்தின் மூலம் பிற்போக்கு வர்க்கங்களின், அவற்றின் அரசியல், பொருளாதார அமைப்பின் வீழ்ச்சி தவிர்க்க முடியாதது என்பதையும் கட்சி முன்வைக்கும் மூலவுத்தி முழக்கங்கள் சரியானவை என்பதையும் உணர எத்தகைய ஸ்தாபன வடிவங்களும், போராட்ட முறைகளும், முழக்கங்களும் தேவையோ அவற்றினை வகுத்து முன் வைப்பதே செயலுத்தி ஆகும். செயலுத்தி என்பது குறிப்பான நிலைமைகளை மட்டும் கணக்கில் கொண்டு வகுக்கீப்படுவதில்லை. மாறாக, அது புரட்சிகர மக்கள் மூலவுத்தி நோக்கங்களை நோக்கி முன்னேறுவதற்காக அந்த திசையில் நகரும் படியாகவே வகுக்கப்படுகிறது. எனவே, செயலுத்தி என்பது மூலவுத்தியின் ஒரு பகுதியாகும். அதற்கு உதவக் கூடியதாகும். அதற்குட்படுவதாகும். எனவே தான், மூலவுத்தி வகைப்பட்ட நோக்கங் களுக்குச் சாதகமாக இருக்கும் போது செயலுத்தி வகைப்பட்ட தோல்விகளைக் கூட கட்சி ஏற்றுக் கொள்கிறது. எனவே தான் "கட்சியின் செயலுத்திகள் என்றால் கட்சியின் அரசியல் நடத்தை அல்லது கட்சியின் நடவடிக்கைகளின் தன்மை, திசை மற்றும் வழி முறைகள் என்று நாம் அர்த்தப்படுத்துகிறோம்" என்றார் லெனின். "செயலுத்திகளின் மிக முக்கியமான பணி குறிப்பிட்ட தருணத்தில் பருண்மையான



சூழ்நிலைகளுக்கு பொருந்தி வரும் படியும், மூலவுத்தி வெற்றிக்கு உரிய பாதையை அதிக பட்சம் தயார் செய்யும் படியும் போராட்ட வழிகளின் சாதனங்களையும் முறைகளையும், வடிவங்களையும் தீர்மானிப்பதாகும்" என்றார் ஸ்டாலின் (தொகுதி 5 பக். 168)

ஆனால், குறிப்பிட்ட மூலவுத்தி கால கட்டம் முழுவதும் புரட்சிகரப் போராட்டம் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. பல்வேறு ஏற்ற இறக்கங்களையும் முன்னேறுதல் பின் வாங்குதல்களையும் கொண்டதாய் இருக்கிறது. புரட்சிகர சக்திகளின் பலமும், சமனீடும் ஒரே மாதிரியாக இல்லாமல் மாறிக் கொண்டிருக்கிறது. எனவே, புரட்சி ஓங்குகிற போது அல்லது தேய்கிற போது நிலவுகிற நிலைமைகளில் இலட்சக் கணக்கான மக்களை புரட்சிகர நிலைகளுக்கு **(Revolutionary Position)** உயர்த்தவும், புரட்சிகர முன்னணிக்கு **(Revolutionary Front)** கொண்டு வந்து அணி வகுக்கும்படி செய்யவும், மாறுபட்ட முழக்கங்களையும், போராட்ட முறைகளையும் அமைப்பு முறைகளையும் செயலுத்தி முன் வைக்கிறது.

எனவேதான் ஸ்டாலின் குறிப்பிட்டார்: "செயலுத்தி என்பது புரட்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தை கடக்கிறபோது இடைவெளியில் இயக்கத்தின் வெள்ளம் பெருகுவதும், வடிவதும் புரட்சி அலை ஓங்குவதும், ஓய்வதுமான ஒப்பு நோக்கில் குறுகியதான கால கட்டத்தில் தொழிலாளி வர்க்கம் நடந்து கொள்ள வேண்டியதன் முறையை நிர்ணயிப்பது. பழைய போராட்ட வடிவங்களுக்கும், பழைய அமைப்பு வடிவங்களுக்கும் பதிலாக புதிய போராட்ட வடிவங்களையும் புதிய அமைப்பு வடிவங்களையும் கையாள்வதன் மூலமோ பழைய முழக்கங்களுக்குப் பதிலாக புதிய முழக்கங்களை வெளியிடுவதன் மூலமோ அன்றி புதியதும் பழையதுமான இந்த வடிவங்களை இணைப்பது முதலானவற்றின் மூலமோ இந்த முறையை நடைமுறையில் பின் பற்றப் போராடுகிறது. இதுதான் செயலுத்தி என்பது".

(லெனினிசத்தின் அடிப்படை அம்சங்கள்)

புரட்சியின் ஏற்ற, வற்ற நிலைமைகளைப் பொறுத்து செயலுத்திகள் தாக்குதல் தன்மை பெற்றதாகவோ தற்காப்பு அல்லது பின்வாங்குதல் செயலுத்திகளாகவோ அமைகின்றன. எனவே செயலுத்தி என்பது ஒரு மூலவுத்தி கால கட்டத்திற்குள்ளாகவே பலமுறை மாறக் கூடியதாக அமைகின்றது.

படிப்பகம்

www.padippkam.com



அக நிலைச் சக்திகள் பலவீனமானவையாகவும், எதிர்ப் புரட்சிகர சக்திகள் பலமானதாகவும், புரட்சி மந்தமாகவும் இருக்கும் போது **தற்காப்பு செயலுத்தி**யை பாட்டாளி வர்க்க இயக்கம் பின்பற்றுகிறது. அக நிலைச் சக்திகளைப் பலப்படுத்தி பின் வரும் தாக்குதலுக்குத் தயார்படுத்துவதே இதன் நோக்கமாகும். ஒரு புரட்சிகர எழுச்சியின் தோல்விக்குப் பின் புரட்சி வெள்ளம் வடியும் போது பாட்டாளி வர்க்க இயக்கம் தன்னை மேலும் அழிவுக்கு உள்ளாக்கிக் கொள்ளாமல் தடுக்கவும், எஞ்சிய சக்திகளை காத்துக் கொண்டு மீண்டும் ஒரு புரட்சிகர போருக்கு தயாரிப்பு செய்யவும் தற்காலிகமாக பின் வாங்குகிறது. இது **பின்வாங்கும் செயலுத்தி** என அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு செயலுத்தி கால கட்டங்களிலும் எதிரியை உடனடியாக தாக்கி வீழ்த்துவது பாட்டாளி வர்க்க இயக்கத்தின் பணியாக இல்லை. மாறாக, தொடக்கத்தில் தனது அக நிலைச் சக்திகளை – கட்சி, மக்கள் திரள் அமைப்புகள் (ஐக்கிய முன்னணி, படை உட்பட) கட்டுவதையும், பலப்படுத்துவதையும் பரந்துபட்ட மக்களை அரசியல் உணர்வு பெறச் செய்து புரட்சியின் பின் கட்சியின் தலைமையில் அணி திரட்டுவதையும் நோக்கமாகக் கொண்டிருக்கிறது. அதற்கேற்ப முழக்கங்களையும், அமைப்பு வடிவங்களையும் போராட்ட முறைகளையும் கட்சி தீர்மானித்து நடைமுறைப் படுத்துகிறது.

எதிரி வர்க்க அரசியல், சித்தாந்த பிடிப்புகளிலிருந்து முறித்துக் கொண்டு அமைப்பு முறையில் திரண்டு எழுச்சியுற்று அரசாங்கத்தை எதிர்த்து மக்கள் போராடும் கால கட்டத்தில் கட்சி, **தாக்குதல் செயலுத்தி**யைக் கையாளும். அதற்கேற்ப முழக்கங் களையும் அமைப்பு, போராட்ட வடிவங்களையும் தீர்மானித்து முன் வைக்கும். இதன் நோக்கம் மக்களை அமைப்பு முறையில் திரட்டுவது மட்டுமின்றி எதிரி வர்க்கத்தின் அரசியல் அதிகாரத்தை அமைப்பு முறையை வீழ்த்திவிட்டு புரட்சிகர அரசியல் அதிகாரத்தை நிறுவுவதாகும்.

உதாரணமாகச் சொன்னால், 1903 – 05 கால கட்டத்தில் ரசியப் புரட்சியானது எழுச்சியை நோக்கி இருந்தது. தாக்குதல் செயலுத்தியைக் கட்சி கடைப் பிடித்தது. அப்போது போராட்ட வடிவங்கள் அரசியல் வேலை நிறுத்தங்கள், அரசியல் போராட்டங்கள், டூமா புறக்கணிப்பு, எழுச்சிகள் என இருந்தன. எட்டு மணி நேர வேலை, நிலம் படைத்த பண்ணைகளை பறிமுதல் செய்வது ஆகியவற்றைப் புரட்சிகரமான முறையில் நிறைவேற்றுவது போன்ற முழக்கங்கள் முன் வைக்கப்பட்டன. இதற்கேற்ப ஸ்தாபன வடிவங்கள் தொழிற்சாலை கமிட்டிகள் என



வடிவமைக்கப்பட்டன. கட்சி ஏறக்குறைய வெளிப்படையாக வேலை செய்தது.

ஆனால், புரட்சி தோல்வியடைந்தபின் 1907 –12 காலகட்டத்தில் புரட்சிகர எழுச்சி வற்றத் தொடங்கியது. பாட்டாளி வர்க்க இயக்கம் தோல்விக்குள்ளாகியிருந்தது. இந்த நிலைமையில் பின்வாங்கும் செயலுத்திகளைக் கட்சி கடைப்பிடித்தது. அதற்கேற்ப போராட்ட வடிவங்கள், பகுதி (Partial) போராட்டங்கள், பொருளாதார வேலை நிறுத்தங்கள், டூமாவில் செயல்படுவது என மாறியது. டூமாவைப் புறக்கணிப்பது கைவிடப்பட்டது. அதற்கேற்ப ஸ்தாபன வடிவங்கள் கல்வி, கலாச்சார, கூட்டுறவு, இன்சூரன்ஸ் மற்றும் சட்டப்பூர்வமான நிறுவனங்களில் வேலை செய்வது என மாறியது. கட்சி தலைமறைவாக செயல்பட்டது.

புரட்சியின் ஏற்ற, வற்றங்களுக்கேற்ப செயலுத்திகள் மாறாவிட்டால் புரட்சிக்கு அது கடும் சேதத்தினை விளைவித்துவிடும். சீனத்தில் 1927 புரட்சி தோல்விக்குப் பின் பின்வாங்கும் செயலுத்தியைக் கட்சி கடைப்பிடித்திருக்க வேண்டும். கட்சியையும், பாட்டாளி வர்க்க ஸ்தாபனத்தையும் கட்டி பலப்படுத்துவதும், பரந்துபட்ட மக்களை புரட்சியின் பின் அமைப்பு முறையில் அணிதிரட்டி நிறுத்துவதுமே அப்போது பிரதான பணியாக கட்சியின் முன் இருந்தது. எனவே அது பிரச்சாரமும், கிளர்ச்சியும் பிரதானமாக இருக்கக்கூடிய, எழுச்சிக்கான தயாரிப்புக் காலமாகும்; உடனடி எழுச்சிகள் தவிர்க்கப்பட வேண்டிய காலமாகும். ஆனால் அதை மீறி லிலிசான் தலைமையில் பின்வாங்கும் செயலுத்திக் காலத்தில் எடுக்கப்பட்ட எழுச்சிக்கான இடது தீவிரவாத நடவடிக்கைகள் (1927) கட்சிக்கும் புரட்சிக்கும் சேதம் விளைவித்தன என்பதை சீனக்கட்சி வரலாறு தெளிவுபடுத்துகிறது.

புரட்சியின் எழுச்சிக் காலத்தையும், வடியும் காலத்தையும் சரியாக பிரித்தறிவது அவசியமாகும். இதைத் தவறாகக் கணித்தால் அரசியலில் எவ்வளவு சரியான தீர்மானங்கள் எடுத்திருந்தபோதிலும் புரட்சி சேதத்திற்கு உள்ளாகும். சீனக்கட்சியின் 6 வது காங்கிரஸ் (1928 ஜூலை) அதற்குப் பின்வரும் காலத்தை பின்வாங்கும் செயலுத்திக்காலம் என சரியாகக் கணிக்காததால் அக்காங்கிரஸ் சரியான அரசியல் முடிவுகள் எடுத்திருந்தபோதிலும் பாட்டாளி வர்க்க இயக்கம் புரட்சியில் பல தோல்விகளை அடைந்தது. அது இரண்டு எழுச்சிகளுக்கு இடையிலான காலம், பரந்துபட்ட மக்களை கட்சியின் தலைமையில்

படிப்பகம்

www.padippkam.com



புரட்சியின் பின் அணி திரட்ட வேண்டிய காலம்; எனவே அதற்கு ஏற்ப ஸ்தாபன, போராட்ட வடிவங்களை முன் வைத்திருக்க வேண்டும். ஆனால் அதற்கு பதிலாக தாக்குதல் செயலுத்தியை முன் வைத்து அதன் அடிப்படையில் அமைப்பு, போராட்ட வடிவங்களை வகுத்து செயல்படுத்தியதால் இச்சேதம் ஏற்பட்டது என்பதைத் தோழர் மாவோ சீனக் கட்சி வரலாற்றைத் தொகுத்துரைக்கும் போது குறிப்பிடுகிறார்.

# 5

# முழக்கங்களும் செயலுத்தியும்

முழக்கம் என்பது கட்சித் திட்டம் – குறிப்பான திட்டம் வகுத்தளித்திருக்கும் மையமான நோக்கங்களை – மக்களுக்கு எளிதில் புரியும் படியாகவும் சுருக்கமாகவும் தெளிவாகவும் உருட்டித் திரட்டி ஒரு சூத்திரமாக கட்சியால் முன் வைக்கப் படுவதாகும். கட்சித் திட்டத்தின் மையமான நோக்கங்களை வடித்தளிக்கும் முழக்கங்கள் ஒரு வரலாற்றுக் கால கட்டம் முழுவதும் தழுவியதாக இருக்கின்றன. குறிப்பான திட்டத்தின் நோக்கங்களை வடித்தளிக்கும் முழக்கங்கள் ஒரு வரலாற்றுக் காலத்திற்குட்பட்ட இடைக் கால கட்டத்தை மட்டும் தழுவியதாக இருக்கின்றன. ஒரு இடைக் கட்டத்திற்குள்ளாகவே புரட்சியின் ஏற்ற இறக்கங்கள் அல்லது முக்கியமான நிகழ்ச்சிகளை மட்டும் தழுவியதாகவும் கட்சி அவ்வப்போது முழக்கங்களை வடித்தளிக்கிறது. இவ்வாறு திட்டம், குறிப்பான திட்டம் ஆகியவற்றின் நோக்கங்களை வடித்தளிக்கும் முழக்கங்கள் மூலவுத்தி முழக்கங்கள் எனவும் இக்கால கட்டத்திற்குள்ளாகவே குறிப்பான நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு வடித்தளிக்கப்படும் முழக்கங்கள் செயலுத்தி முழக்கங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. மூலவுத்தி முழக்கங்கள் கட்சியின் திட்டம், குறிப்பான திட்டம் ஆகியவற்றின் நோக்கங்களையும் மூலவுத்திப் பொதுத் திசையையும் மக்கள் முன் தெளிவாக முன்னெடுத்து வைப்பதுடன் செயலுத்திகளின் அரசியல் திசை வழியையும் நிர்ணயிக்கின்றன. செயலுத்தி முழக்கங்கள் மூலவுத்தி கால கட்டத் திற்குள்ளாகவே எழும் பல்வேறு சிறப்பான நிலைமைகளில் கட்சியின் அரசியல் திசை வழியில் எதிரிகளை எதிர்த்து உடனடியாக மக்களை அணி திரட்டவும் எதிரியை அம்பலப்படுத்தி தனிமைப்படுத்தி பலவீனப்படுத்தவும், புரட்சிகரச் சக்திகளை பலப்படுத்தவும் முன் வைக்கப்படுகின்றன.



எடுத்துக் காட்டாக, இரசியப் புரட்சியின் முதற் கட்டத்தில் – ஜனநாயகப் புரட்சியில் ''ஜார் எதேச்சதிகாரம் ஒழிக'' ''தொழிலாளர், விவசாயிகளின் ஜனநாயக சர்வாதிகாரம்'' என்ற முழக்கங்கள் மூலவுத்தி முழக்கங்களாக முன் வைக்கப்பட்டன. அதே கட்டத்தில் ''இரசிய – ஜப்பானியப் போர் எதிர்ப்பு'', ''டூமாவைப் புறக்கணியுங்கள்'', இன்னும் இவை போன்ற பல்வேறு செயலுத்தி முழக்கங்கள் வெவ்வேறு கட்டங்களில் முன் வைக்கப்பட்டன. இரண்டாவது கட்டத்தில் ''அனைத்து அதிகாரங்களும் சோவியத்துகளுக்கே'' என்றும் ''தொழிலாளர், விவசாயிகளது சர்வாதிகாரம்'' என்ற மூலவுத்தி வகைப்பட்ட முழக்கங்களும், ''ஏகாதிபத்திய யுத்த எதிர்ப்பு '' என்பது போன்ற பிற செயலுத்தி முழக்கங்களும் முன் வைக்கப்பட்டன.

சீனத்தின் புதிய ஜனநாயகப் புரட்சியில் புரட்சியின் கட்டம் முழுமைக்கும் பொருந்தக் கூடிய 'ஏகாதிபத்தியம் ஒழிக', 'மக்கள் ஜனநாயகச் சர்வாதிகாரம்' ஆகிய முழக்கங்கள் முன் வைக்கப்பட்டிருந்தன. அதே நேரத்தில் புரட்சியின் வெவ்வேறு இடைக் கட்டங்களில் அவ்விடைக் கட்டங்களுக்கான மூலவுத்தி முழக்கங்கள் முன் வைக்கப்பட்டன. எடுத்துக் காட்டாக, 1927–37 விவசாயிகள் புரட்சி இடைக் கட்டத்தில் 'தொழிலாளர் – விவசாயிகள் குடியரசு' என்ற முழக்கம் முன் வைக்கப்பட்டது. 1937 – 45 ஜப்பானிய எதிர்ப்புத் தேசியப் புரட்சி இடைக் கட்டத்தில் 'ஜப்பானிய ஏகாதிபத்தியம் ஒழிக', 'மக்கள் குடியரசு' என்ற முழக்கங்கள் முன் வைக்கப்பட்டன. இவை தவிர ஒவ்வொரு இடைக் கட்டத்திலும் குறிப்பான செயலுத்தி நிலைமைகளில் பல்வேறு செயலுத்தி முழக்கங்களும் முன் வைக்கப்பட்டன. எடுத்துக் காட்டாக, ஜப்பானிய எதிர்ப்புத் தேசியப் புரட்சி இடைக் கட்டத்திலேயே 'உள்நாட்டுப் போரை நிறுத்து', 'சரணடைவதை எதிர்த்து நில்', 'ஐக்கிய முன்னணியில் ஊன்றி நில்', 'தளப் பிரதேசத்தைத் தாக்காதே', 'அரசியல் கைதிகளை விடுதலை செய்' என்பது போன்ற பல்வேறு முழக்கங்கள் பல்வேறுபட்ட கால கட்டங்களில் முன் வைக்கப்பட்டன.

இவ்வாறு முழக்கங்கள் வடித்து முன் வைக்கப்பட்ட பின் அவை வெவ்வேறு கட்டங்களில் வெவ்வேறு முக்கியத்துவம் பெறுகின்றன. அதைப் பொறுத்து அவை பிரச்சார முழக்கம் **(Propaganda slogan)** எனவும், கிளர்ச்சி முழக்கம் **(Agitation slogan)** எனவும், செயல் முழக்கம் **(Action slogan)** எனவும் நெறிப் படுத்தும் முழக்கம் **(Directive slogan)** எனவும் பெயர் பெறுகின்றன. எடுத்துக் காட்டாக, ஒரு முழக்கம் வடித்து முன் வைக்கப்பட்டு அது சில தனி நபர்களை

படிப்பகம்

www.padippkam.com



வென்றெடுப்பதற்குப் பயன்படும் நிலையில் அது பிரச்சார முழக்கமாக இருக்கிறது. அதாவது அம்முழக்கத்தின் உட்பொருளைக் கட்சி உணர்ந்திருந்த போதிலும் பரந்துபட்ட மக்களை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கு முதலில் அந்த முழக்கத்தின் முழுப் பொருளையும் முழுப் பரிமாணத்தோடு புரிந்து கொண்டுள்ள தனி நபர்களை, முன்னணியினரை வென்றெடுப்பது அவசியமாக இருக்கும் போது அது பிரச்சார முழக்கமாக இருக்கிறது. அம்முழக்கத்தின் உட்பொருள் எதார்த்தத்திலேயே உண்மையானது என்று பரந்துபட்ட மக்கள் உணரத் தொடங்கும் போது (உண்மைப் பொருளை நடைமுறைப் போராட்டங்கள் மூலம் உணரத் தொடங்கும் போது) அம்முழக்கம் கிளர்ச்சி முழக்கமாகிறது. மேலும் அம்முழக்கத்தின் உட்பொருள் ஏறக்குறைய எதார்த்தமாக மாறிக் கொண்டிருக்கும் போது அம்முழக்கம் செயல் முழக்கமாக (Action slogan) மாறுகிறது. இப்போது பரந்துபட்ட மக்கள் இம்முழக்கத்தின் கீழ் அதை நடைமுறைப் படுத்துவதற்காக தெருவில் இறங்கிப் போராடத் தொடங்குகிறார்கள். இத்தகைய நிலையில் போராட்டத்தினை ஒரு முனைப்படுத்தி திட்டமிட்டு நிறைவேற்றுவதற்காக கட்சி குறிப்பான ஆணைகளைப் பிறப்பித்து நிறைவேற்றும் போது அதே முழக்கம் நெறிப் படுத்தும் முழக்கமாக (Directive slogan) மாறுகிறது. இம்முழக்கம் எல்லாக் கட்சி உறுப்பினர்களையும் வழி நடத்துகிறது; அதன் சரியான தன்மையின் காரணமாகவும், சரியான நேரத்தில் நெறிப்படுத்துவதன் காரணமாகவும் பரந்துபட்ட மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு செயல் படுத்தப்படுவதாகவும் மாறுகிறது.

உதாரணமாக : 'ஜார் எதேச்சதிகாரம் ஒழிக' என்ற முழக்கம் இரசியாவில் 1880களில் உழைப்பாளர் விடுதலைக் குழுவால் முன் வைக்கப்பட்டது. அப்போது ஜார் எதேச்சதிகாரம் ஏன் வீழ்த்தப்பட வேண்டும் என்பதை விளக்கிப் பிரச்சாரம் செய்வதற்கும் அதன் மூலம் தனிநபர்களை வென்றெடுப்பதற்கும் மட்டுமே அம்முழக்கம் பயன்பட்டது. அதாவது, அப்போது பிரச்சார முழக்கமாக இருந்தது. ரஷ்ய – ஜப்பான் யுத்தத்தின் போது ஜார் எதேச்சதிகாரம் நிலையானதல்ல வீழக் கூடிய சாத்தியப்பாடு கொண்டதே என்பதை மக்கள் தமது அனுபவத்தில் கண்டனர். அப்போது 'ஜார் எதேச்சதிகாரம் ஒழிக' என்ற முழக்கம் பரந்துபட்ட மக்களை தட்டி எழுப்பும் கிளர்ச்சி முழக்கமாக (Agitative slogan) ஆயிற்று. 1917 பிப்ரவரி புரட்சிக்கு சற்று முன்பாகவே ஜார் ஏற்கனவே முற்றிலும் மதிப்பிழந்து அதிகாரம் இழந்து விட்ட நிலையில் பெரும்பாலான மக்கள் ஜாரை வீழ்த்து



வதற்கான போராட்டத்தில் இறங்கினர். அப்போது, 'ஜார் எதேச்சதிகாரம் ஒழிக' என்ற முழக்கம் கிளர்ச்சி நிலையிலிருந்து செயல்முழக்கமாக (Action slogan) ஆயிற்று. பிப்ரவரி புரட்சியின் போது இம்முழக்கம் கட்சியின் நேரடி நெறிப்படுத்தும் (Directive slogan) முழக்கமாயிற்று. குறிப்பிட்ட நிறுவனங்களையும், ஜார் அமைப்பின் நிலைகளையும் குறிப்பிட்ட நாளில் கைப்பற்றும்படி கட்சி அறைகூவல் விடுத்தது. ஏற்கெனவே ஜார் தூக்கி எறியப்படுவதும் ஜாரிய முறை அழிக்கப் படுவதும் நடந்து கொண்டிருக்கும்போதே இவ்வறைகூவல் விடப்பட்டது.

நெறிப்படுத்தும் முழக்கம் என்பது கட்சியால் நேரடியாக விடப்படும் செயலுக்கான அறைகூவலாகும். அதுகுறிப்பான இடத்தையும் நேரத்தையும் கொண்டிருக்கும். எல்லாக் கட்சி உறுப்பினர்களையும் அது கட்டுப்படுத்தும். மக்களின் கோரிக்கைகள் சரியான முழக்கங்களாக வடிக்கப்பட்டு சரியான நேரத்தில் அறைகூவலாக கட்சியால் விடப்பட்டிருக்குமானால் இம்முழக்கம் வழக்கமாக பரந்துபட்ட உழைக்கும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுவிடும்.

எனவே, கட்சியானது மூலவுத்தி அல்லது செயலுத்தி முழக்கங்களை வடித்துச் செயல்படுத்தும்போதுஅவை போராட்ட நோக்கங்களை சரியாக உருட்டித் திரட்டி வடித்துத் தருவதாக இருக்கும்படி பார்த்துக்கொள்வதும், பிரச்சாரம், கிளர்ச்சி, செயல், நெறிப்படுத்துதல் என்ற ஒவ்வொரு கட்டத்திலும் அதற்குரிய சரியான நேரத்தில் சரியான முறையில் செயல்படுத்தும்படி பார்த்துக் கொள்வதும் அவசியமாகும். அவ்வாறின்றி முழக்கங்களை தவறாக வடித்தாலோ தவறாக பிரயோகித்தாலோ அபாயகரமான விளைவுகள் ஏற்படும். அதாவது, முழக்கங்கள் போராட்ட நோக்கங்களை சரியாக வெளிப்படுத்தவில்லை எனில் மக்களை சரியான திசையில் அணிதிரட்டுவது சாத்தியமில்லை. பிரச்சாரம், கிளர்ச்சி, செயல், நெறிப்படுத்துதல் ஆகிய கட்டங்களை தவறாகக் கணித்தாலோ அல்லது தவறாகப் பிரயோகப்படுத்தினாலோ கட்சி மக்களிடமிருந்து தனிமைப்படுவதும், புரட்சி இயக்கம் தேக்கமும் தோல்வியும் அடைவதும் தவிர்க்க முடியாதது ஆகிவிடும்.

படிப்பகம்

www.padippkam.com



# 6

# திட்டம், மூலவுத்தி, செயலுத்தி ஆகியவற்றுக்கிடையிலான உறவு

கட்சி புறநிலை சமூக ஆய்விலிருந்து புரட்சியின் கட்டத்தையும் ஒரு திட்டத்தையும் வகுத்து முன்வைக்கிறது. அது சமுதாயத்தில் உற்பத்தி முறையிலும், மேல்கட்டுமானத்திலும் செய்ய வேண்டிய அடிப்படையான புரட்சிகரமான மாற்றங்களைச் சுட்டிக்காட்டுகிறது. புரட்சியின் கட்டம் மாறாமல் இருக்கும்போதே அரசியல் அரங்கில் திருப்பங்கள் நேரும்போது அவசியமானால் ஒரு குறிப்பான திட்டத்தையும் கட்சி வகுத்து முன்வைக்கிறது. இவ்வாறு உடனடியாகத் தூக்கி எறியப்பட வேண்டிய எதிரிகள் மற்றும் செய்யப்படவேண்டிய அரசியல் – பொருளாதார மாற்றங்களைக் கட்சி தீர்மானித்து விடுகிறது. இந்நோக்கங்களை அடைவதற்கு எதார்த்தத்தில் அரசியல் அதிகாரத்தில் இருக்கும் எதிரிகளை தூக்கிஎறிய வேண்டியுள்ளது. அதற்கு சமரசச் சக்திகளை அம்பலப்படுத்தி ஓர் ஐக்கிய முன்னணியை புரட்சிகர வர்க்கங்களைக் கொண்டு கட்ட வேண்டும். இதை மூலவுத்தி சுட்டிக்காட்டுகிறது. இந்த ஐக்கிய முன்னணிக் கொள்கையின் சரியான தன்மையை தமது சொந்த அனுபவங்களின் வாயிலாக மக்கள் உணர்ந்து அதில் அணிதிரள்வதற்கு உதவியாக செயலுத்திகள் சரியான முழக்கங்களையும், அமைப்பு வடிவங்களையும், போராட்ட முறைகளையும் முன்வைக்கிறது. இவ்வாறு செயலுத்தி என்பது கட்சிக் கொள்கை மற்றும் வழியின் உடனடி நடைமுறையாக இருக்கிறது.

ஒரு மூலவுத்தி காலத்திற்குள் ஏற்படும் பல்வேறு நிகழ்ச்சிகள், புரட்சியின் ஏற்ற, வற்றங்கள் ஆகியவற்றிற்கு ஏற்ப கட்சி வகுத்தளிக்கும் செயலுத்திகளே கட்சியில் மூலவுத்தி அமைப்புகளில் (ஐக்கிய முன்னணி போன்றவை) பரந்துபட்ட மக்கள் அணிதிரள்வதற்கு வழிவகை செய்கின்றன. மூலவுத்தி அமைப்புகளும், முழக்கங்களும் கட்சியால் வகுத்தளிக்கப்பட்ட திட்டத்தின் சரியான தன்மையை உணர்ந்து அவற்றை நிறைவேற்ற மக்களை அணிதிரட்டுகின்றவையாக இருக்கின்றன. இவ்வாறு கட்சியின் திட்டம், மூலவுத்தி, செயலுத்தி ஆகியன ஒன்றோடொன்று தொடர்புடையவையாக இருக்கின்றன.



அதாவது, திட்டத்துடன் மூலவுத்தியின் தொடர்பும், மூலவுத்தியுடன் செயலுத்தியின் தொடர்பும் தொலைநோக்குடன் சாத்தியப்பாடான நடைமுறையை இணைப்பது என்ற அடிப்படையில் இருக்கின்றன.

தொலைநோக்குடன் இணையாத சாத்தியப்பாடான நடைமுறைகளும், தொலைநோக்கற்ற சாத்தியப்பாடான நடைமுறைகளும் சீர்திருத்தவாத நடைமுறைகளாக இருக்கின்றன. திரிபுவாத மற்றும் சீர்திருத்தவாத இயக்கங்களின் நடைமுறைகள் இத்தகையனவே. தொலைநோக்குடன் சாத்தியப்பாடற்ற நடைமுறையை இணைக்கும் முயற்சியே இடது தீவிரவாத நடைமுறையாக இருக்கிறது. தொலைநோக்குடன் இணைக்கப்பட்ட சாத்தியப்பாடான நடைமுறையே புரட்சிகர நடைமுறையாக – புரட்சிகர மூலவுத்தி, செயலுத்தியாக இருக்கின்றது.

# 7

# அரசியல் படையும், ஆயுதப்படையும்

கட்சி புறநிலைப் பக்கத்தைச் சார்ந்து நின்று திட்டம், மூலவுத்தி, செயலுத்தி மற்றும் முழக்கங்களை வடித்துக்கொண்டபின்அவற்றின் அடிப்படையில் மக்களைத் திரட்டும் பணியை எதிர்கொள்கிறது. ஏனெனில் புரட்சியை நடத்த வேண்டியவர்கள் மக்களே. கட்சியால் வகுக்கப்பட்ட முழக்கங்களின் அடிப்படையில் அரசியல்படுத்தப்பட்டு மூலவுத்தி, செயலுத்தி வகையிலான அமைப்புகளில் அணிதிரட்டப் பட்டிருக்கும் மக்களே அரசியல் படையாகும். இதை சாதிப்பது எப்படி?

முதலாவதாக, மூலவுத்தி, செயலுத்தி முழக்கங்களின் அடிப்படையில் பிரச்சாரங்களை மேற்கொண்டு முன்னணியினரை வென்றெடுக்க வேண்டும். பிரச்சாரம் என்பது முழக்கங்களின் மையமான பொருளையும், அதன் சரியான தன்மையையும், பல்வேறு கோணங்களிலும் முழு பரிமாணத்தோடும் விளக்குவதாகும். இம்முறையில் மக்களின் முன்னணிப் பிரிவினரை மட்டுமே வென்றெடுக்க முடியும். இத்தகைய முன்னணிப் பிரிவினரே பரந்துபட்ட மக்களுக்கு நேரடியாக ஸ்தல தலைமையளிப்பவர்கள். இப்படிப்பட்ட முன்னணியினரை வென்றெடுக்காமல் பரந்துபட்ட மக்களை அணிதிரட்ட முடியாது.

படிப்பகம்

www.padippkam.com



இரண்டாவதாக, மக்களைப் பிரச்சார முறைகள் மூலம் நேரடியாக அரசியல்படுத்த முடியாது. மாறாக, பிரச்சார முறைகளுடன் கூடவே, அரசியல் அம்பலப்படுத்தல்களையும், கிளர்ச்சிகளையும் பரவலாகக் கையாள்வதன் மூலமே மக்களை அரசியல்படுத்த முடியும். அரசியல் அம்பலப்படுத்துதல் என்பது எதிரிகளை – எதிரி வர்க்கத் தலைவர்கள், கட்சிகள், அமைப்புகள், அரசு எந்திரம், அதிகாரிகள், ஆளும் வர்க்கங்கள் – ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியிலும், அவர்களின் மக்கள் விரோதப் பண்புகளையும், பலவீனங்களையும், போலித்தனங்களையும் எடுத்துரைத்துப் பரப்புவதாகும். இவ்வாறு அன்றாடம் நிகழக் கூடிய ஒவ்வொரு பிரச்சினையிலும் நிகழ்ச்சிகளிலும், அவற்றின் உண்மை சொரூபத்தை மக்கள் முன் பத்திரிக்கைகள், மேடைகள், துண்டறிக்கைகள் மூலம் எடுத்து வைப்பதன் மூலம் ஒட்டு மொத்தமாக ஆளும் வர்க்க அமைப்பின் தவறான தன்மை, மற்றும் புதிய சமூக அமைப்பின் அவசியம் பற்றி நமது பிரச்சாரம் எடுத்துரைக்கும் கருத்துக்களின் சரியான தன்மையை அவர்கள் புரிந்து கொள்ள உதவ முடியும்; நமது மூலவுத்தி, செயலுத்தி முழக்கங்களின் பொருளை முழுப் பரிமாணத்தோடு புரிந்து கொள்ள உதவ முடியும்.

கிளர்ச்சி என்பது, எதிரிகளை கையும் களவுமாக மக்கள் முன் பிடித்து நிறுத்துவதாகும்.

இத்தகைய அம்பலப்படுத்தல்களும் கிளர்ச்சிகளும் மக்கள் எதிரிகளை புரிந்து கொள்ளவும், அவர்களை எதிர்த்து நடவடிக்கையில் இறங்கவும் தூண்டுதல் அளிக்கிறது. எதிரிகளைப் பற்றிய தவறான கருத்துகளிலிருந்து விடுபட்டு – அவர்களுடைய அமைப்புகளிலிருந்தும் நீங்கச் செய்கிறது. ஆனால் பிரச்சாரம், கிளர்ச்சி, அம்பலப்படுத்துதல்கள் மட்டும் மக்கள் கட்சியின் அரசியல் வழியின் சரியான தன்மையைப் புரிந்து கொள்ள போதுமானதல்ல. அவர்கள் தமது சொந்த அனுபவங்கள் மூலமே அதன் சரியான தன்மையை உணருகின்றனர். எனவே, பிரச்சாரம், கிளர்ச்சி, அம்பலப்படுத்துதல்கள் அனைத்தும் கட்சியின் செயலுத்தி வழியுடன் இணைக்கப்பட வேண்டும். அரசியல் அம்பலப்படுத்தல்களும், கிளர்ச்சிகளும் கட்சியின் மூலவுத்தி, செயலுத்தி அடிப்படையில் செய்யப்படும் போது மக்களை மூலவுத்தி, செயலுத்தி அமைப்புகளில் அணி திரட்டவும் போராட்டங்களுக்கு வழி நடத்தவும் சாத்தியமாக்குகிறது.



ஆனால், மூலவுத்தி முழக்கங்களைவிட செயலுத்தி முழக்கங்கள் உடனடி நிகழ்ச்சியை மையமாகக் கொண்டிருப்பதால் செயலுத்தி முழக்கங்களின் அடிப்படையிலான பிரச்சாரமும், கிளர்ச்சி, அம்பலப் படுத்தல்களும், அமைப்புகளும் அம்முழக்கங்களைச் செயல்படுத்துவதற்கான முன்னணியாளரையும், மக்களையும் உடனடியாக ஈர்ப்பதாக அமைகிறது. இத்தகைய பல்வேறு செயலுத்தி நடவடிக்கைகள் மூலமே மக்கள் நமது மூலவுத்தி நோக்கங்களை தமது சொந்த அனுபவங் களிலிருந்தே நெருங்கி வரும்படி செய்யப்படுகின்றனர். அப்போது, நமது மூலவுத்தி முழக்கங்களின் அடிப்படையிலான பிரச்சாரம், இன்னும் கூடுதலான முன்னணியாளரை வென்றெடுப்பதையும், அம்முழக்கம் கிளர்ச்சி மற்றும் அடுத்த கட்டங்களுக்கு முன்னேறுவதையும் சாத்தியப்படுத்துகிறது.

இவ்வாறு மூலவுத்தி, செயலுத்தி முழக்கங்கள் அடிப்படையில் பிரச்சாரம், கிளர்ச்சி, அம்பலப்படுத்தல்கள் மூலம் மக்களை விழிப்புணர்வு பெறச்செய்து, மூலவுத்தி, செயலுத்தி அமைப்புகளில் அணிதிரட்டுவதே அரசியல் படையைக் கட்டுவதாகும்.

பாட்டாளி வர்க்கத்தின் பல்வேறு மக்கள் திரள் அமைப்புகளிலும் மூலவுத்தி, செயலுத்தி முழக்கங்களின் அடிப்படையில் மக்கள் திரட்டப்படுவதன் நோக்கம் மக்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதேயாகும். ஆனால் அரசியல் அதிகாரத்தைக் கைப் பற்றுவது உடனடி நடைமுறையாக மாறுவதற்குமுன் பரந்துபட்ட மக்களை எதிரிகளுக்கு எதிராக ஐக்கியப்படச் செய்யவும், தமது நலன்களைக் காத்து போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும், அரசியல்படுத்தி அமைப்பாக்கவும் பல்வேறு பகுதி, பொருளாதார – அரசியல் போராட்டங்களையும் பொருளாதார – அரசியல் கிளர்ச்சி, அம்பலப் படுத்தல்களையும் பிரச்சார இயக்கங்களையும் நடத்தவேண்டும். அப்போது எதிர்வரும் எதிரிகளின் தாக்குதல்களை முறியடிக்கவும், முன்னேறவும் ஆயுதம் தாங்கிய பயிற்சி பெற்ற **தற்காப்புக் குழுக்கள்** கட்டப்படும். எனினும், இவை ஆயுதப் படைகள் அல்ல.

ஆயுதப்படை (இராணுவம்) என்பது பல்வேறு மக்கள் திரள் அமைப்புகளிலும் திரட்டப்பட்ட மக்கள் அரசியல் அதிகாரத்திற்காகப் போராடும்போது, நிலவும் அரசு எந்திரத்தை நொறுக்கி எறிந்துவிட்டு புதிய அரசு அதிகாரத்தை நிறுவவும் அல்லது நிறுவப்பட்டதை கட்டிக்காக்கவும் அமைக்கப்பட்ட பயிற்சி பெற்ற ஆயுத அமைப்பாகும். எதிரிகளுடைய அரசியல் அதிகாரத்தை வீழ்த்தி புதிய அரசியல்

படிப்பகம்

www.padippkam.com



அதிகாரத்தை நிறுவ அல்லது காக்க எதிரிகளின் ஆயுத அமைப்புகளை யுத்தத்தில் முறியடிக்கும் பணியை எதிர் கொள்ளும் போது இத்தகைய ஆயுத அமைப்புகள் கட்டப்படுகின்றன. இவை எதிரிகளின் இராணுவத்தை எதிர்த்து நடத்தும் யுத்தங்களே ஆயுதப் போராட்டங்களாகும்.

ஆயுதப் படை என்பது அரசியல் அதிகார நிறுவனத்தின் ஒரு பகுதியாகும். எனவே, அது அரசியல் அதிகாரத்திற்கான போராட்டத்தின் ஊடாக மட்டுமே கட்டப்படுகிறது. இத்தகைய படைகள் அரசியல் அதிகாரத்திற்கான போராட்டங்களின் ஊடாக தற்காப்புக் குழுக் களுக்குத் திட்டமிட்டுப் பயிற்சி அளிப்பதன் மூலமும் – திட்டமிட்டுக் கட்டப்பட்ட தொழிலாளர் – விவசாயிகளின் ஆயுத எழுச்சிகள் மூலமும் எதிரி இராணுவ அமைப்புகளிலிருந்து பிளவுபட்டு வருகின்ற சிப்பாய்களுக்கு மறு கல்வி அளிப்பதன் மூலமும் – இவ்வாறு பல்வேறு வழிகளில் கட்டப்படுகின்றன.

எதிரியை அரசியல் வகையில் தனிமைப் படுத்துவதையும், மக்களை அரசியல்படுத்தி அமைப்பாக்குவதையும் (அரசியல் படையைக் கட்டுவதையும்) அரசியல் அம்பலப்படுத்தல், கிளர்ச்சி மற்றும் அரசியல் போராட்டங்கள் நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. அரசியல் வகையில் தனிமைப் படுத்தப்பட்ட எதிரியை இறுதியாக ராணுவ வகையில் அடித்து வீழ்த்தி அதிகாரத்தைக் கைப்பற்றுவதை ஆயுதப் போராட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. எனவே, தனிமைப்படுத்தப்பட்ட எதிரியை ராணுவ வகையில் அடித்து வீழ்த்துவதற்கு அரசியல் போராட்டத்தின் தொடர்ச்சியாய் ஆயுதப் படைகள் கட்டப்பட்டு ஆயுதப் போராட்டம் வெடித்தெழுகிறது. ஆயுதப் போராட்டம் அரசியல் நோக்கங்களை யுத்தத்தின் மூலம் வெல்லுவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு எதிரிகளை ராணுவ வகையில் முறியடிக்க ஆயுதப் படைகள் கட்டப் பட்டிருக்கும் போது ராணுவ மூலவுத்திகள் வகுக்கப் படுகின்றன. ராணுவ மூலவுத்தி என்பது ராணுவ யுத்தத்தில் எதிரி களுடைய இராணுவத்தை முற்றிலுமாக முறியடிக்கும் வரை நமது இராணுவம் செயல்பட வேண்டிய முறைகள் குறித்த பொது வரை படமாகும்.



# 8

# இராணுவ மூலவுத்தியும் அரசியல் மூலவுத்தியும்

ராணுவ மூலவுத்தி என்பது யுத்தத்தில் பருண்மையாக படைப்பிரிவுகளை நடத்திச்சென்று வெற்றி ஈட்டுவதற்கான விதிகள் பற்றிய அறிவியல் ஆகும். சமூகச் சக்திகள் வரலாற்று வழியில் தவிர்க்க முடியாமல் வர்க்கங்களாகப் பிரிந்து நிற்கின்றன. அவற்றில் முற்போக்கானவை புரட்சியின் எதிரியை எதிர்த்துத் திரண்டே ஆகவேண்டும் என்ற கட்டாயம் உள்ளது. அச்சக்திகளை அமைப்பு முறையில் அணிதிரட்டி புரட்சியை முன்னெடுத்துச்செல்வதையே அரசியல் மூலவுத்தி நோக்கமாகக் கொண்டுள்ளது. எனவே பாட்டாளி வர்க்கக் கட்சியின் பின்னால் அரசியல் படை இல்லாதபோதும் புறநிலை ஆய்வின் விளைவாக எழுந்த திட்டம், சக்திகளின் (வர்க்கங்களின்) ஆய்வு அடிப்படையிலே அரசியல் மூலவுத்தியை வகுக்க முடியும். ஆனால் இராணுவ மூலவுத்தி என்பது இராணுவ முறையில் புரட்சியின் வெற்றியை ஈட்டுவதை நோக்கமாகக் கொண்டு வகுக்கப்படுகிறது. பிரதானமாக எதிரிகளின் திட்டமிட்ட முறையில் கட்டப்பட்டுள்ள இராணுவ அமைப்புகளையும் பாட்டாளி வர்க்கத்தின் திட்டமிட்ட முறையில் கட்டப்பட்டுள்ள இராணுவ அமைப்புகளையும் கணக்கில் கொண்டு பாட்டாளி வர்க்க இராணுவம் யுத்தத்தில் வெற்றிகொள்ள, அதை வழிநடத்திச் செல்வதற்காக இராணுவ மூலவுத்தி வகுக்கப் படுகிறது. அதாவது அரசியல் மூலவுத்தி வகுப்பதற்கு அடிப்படையான வர்க்கங்கள் புறநிலைக் கூறுகளாக இருப்பவையாகும். ஆனால் இராணுவ மூலவுத்தியை வகுப்பதற்கு அடிப்படையான இராணுவ அமைப்புகள் அகநிலைக் கூறுகளாகும். எனவே பாட்டாளி வர்க்கம் தனது சொந்த இராணுவ அமைப்புக்களை – படைகளை – கட்டியிருக்கும் போது மட்டுமே பாட்டாளி வர்க்க இராணுவம் தனது வெற்றிக்காக மேற்கொள்ள வேண்டிய இராணுவ மூலவுத்தியை வகுக்க முடியும். அதாவது அரசியல் மூலவுத்தியை வகுப்பதற்கு புறநிலைக்கூறுகள் (வர்க்கங்கள்) பிரதானப் பங்காற்றுகின்றன. இராணுவ மூலவுத்தி யிலோ அகநிலைக் கூறுகளே (திட்டமிட்ட முறையில் செயல்படுபவை, கட்டுப்படுத்தப்படுபவை) அதிக பங்காற்றுகின்றன. எனவே பாட்டாளி வர்க்கத்தின் இராணுவ அமைப்புகள் தோன்றுவதற்கு முன் செஞ்சேனையின் இராணுவ மூலவுத்தியை வகுக்க முடியாது.

படிப்பகம்

www.padippkam.com



சுருக்கமாக அரசியல் மூலவுத்தி - இராணுவ மூலவுத்தி ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டை பின்வருமாறு பட்டியலிடலாம்.

1. அரசியல் மூலவுத்தி வர்க்கச் சக்திகளை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்படுகிறது. வர்க்கங்கள் புறநிலைக் காரணிகள் என்பதால் கட்சி அரசியல் படையைக் கட்டும் முன்பே அரசியல் மூலவுத்தி வகுத்துக்கொள்கிறது. அரசியல் படையைக் கட்டுவதற்கே முன்னதாக அரசியல் மூலவுத்தி, செயலுத்தி வகுத்துக்கொள்வது அவசியமாகும். இராணுவ மூலவுத்தி இராணுவப் படைப்பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்படுகின்றது. இராணுவம் என்பது கட்சியின் வழிகாட்டுதலில், அரசியல் போராட்டத்தின் தொடர்ச்சியாய் அதன் உயர்ந்த நிலையில் ஆயுதப் போராட்டம் நடத்துவதற்காகக் கட்டப்படும் அகநிலைக் காரணியாகும். எனவே இராணுவப்படை கட்டுவதற்கு முன் இராணுவ மூலவுத்தி வகுக்க முடியாது.

2. அரசியல் மூலவுத்தி புரட்சியின் கட்டம் அல்லது இடைக்கட்டத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. புரட்சி, எதிர்ப்புரட்சி வர்க்க சக்திகளின் அணிவகுப்பால் ஏற்படும் மாற்றங்களைப் பொறுத்து அரசியல் மூலவுத்தி மாறுகிறது. இராணுவ மூலவுத்தி என்பது ஒரு ஒட்டுமொத்த யுத்த நிலைமையை கணக்கில்கொண்டு வகுக்கப்படுகிறது. புரட்சியின் கட்டம் அல்லது இடைக்கட்டத்துக்குள்ளாகவே பல்வேறு யுத்த நிலைமைகள் உருவாகலாம் என்பதால் மூலவுத்திகளும் யுத்த நிலைமைகளுக்கு ஏற்ப மாறக்கூடியதாகும். எனவே புரட்சியின் கட்டம் அல்லது இடைக்கட்டத்தை சார்ந்திருப்பதில்லை இராணுவ மூலவுத்தி.

3. அரசியல் மூலவுத்தி தேசம் தழுவியதாக இருக்கிறது.இராணுவ மூலவுத்தி ஒட்டுமொத்த யுத்த நிலை நிலவும் தேசம் அல்லது பகுதி அல்லது ஒரு யுத்த முறையை மட்டும்கூட தழுவியதாக இருக்கிறது.

4. அரசியல் மூலவுத்தியின் தலைமை பாட்டாளி வர்க்கக் கட்சியாகும். கட்சியே மூலவுத்தி வகுத்து வழிகாட்டுகிறது. இராணுவ மூலவுத்தி தலைமை என்பது இராணுவத் தளபதிகளின் குழுவாகும். இராணுவத் தளபதிகள் குழுவே மூலவுத்தி வகுத்துத் தலைமை தாங்குகிறது.

5. புறநிலைமையில் சமுதாயத்தில் ஒவ்வொரு வரலாற்றுத் திருப்பத்திலும் பிரிந்திருக்கும் புரட்சிகர வர்க்கச் சக்திகளைப் புரட்சியின் இலக்கை நோக்கி வெற்றிக்கு இட்டுச்செல்ல அரசியல் மூலவுத்தி



வகுக்கப்படுகிறது. அகநிலையில் கட்டப்படும் இராணுவ சக்திகள் குறிப்பிட்ட யுத்தத்தில் வெற்றி பெறுவதற்காக வகுக்கப்படுகிறது.

6. அரசியல் மூலவுத்தியின் வெற்றி இராணுவ மூலவுத்திகளின் வெற்றியிலேயே முழுமையடைகிறது.இராணுவ மூலவுத்தியின் வெற்றிக்கு அரசியல் மூலவுத்தி , செயலுத்திகளின் சரியான தன்மை உதவியாய் இருக்கின்றன.

அரசியல் மூலவுத்தி மற்றும் ராணுவ மூலவுத்தி இரண்டுமே பாட்டாளி வர்க்க இயக்கத்தின் எதிரியை வீழ்த்தி வெற்றியை ஈட்டுவதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. ஆனால் அரசியல் மூலவுத்தியை நடைமுறைப்படுத்தும்போது – குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்தில் அரசியல் பிரச்சினைகளை இராணுவத்தைக் கொண்டு தீர்க்கும் நிலை ஏற்படும்போது யுத்தத்தில் இராணுவத்தை வழிநடத்துவதற்காக இராணுவ மூலவுத்தி வகுக்கப்படுகின்றது.

# 9

# அரசியல் போராட்டத்திற்கும் ஆயுதப் போராட்டத்திற்கும் இடையிலான உறவு, படை கட்டுவது, சிவப்பு அரசியல் அதிகாரத்தை நிறுவுவது ஆகியவை பற்றி

## அ) அரசியல் போராட்டத்திற்கும், ஆயுதப் போராட்டத்திற்கும் உள்ள உறவு பற்றி :

''அரசியலின் நீடிப்பே யுத்தம் என்பது''. இந்த அர்த்தத்தில் யுத்தம் அரசியலாகவும், யுத்தம் தானே அரசியல் நடவடிக்கையாகவும் விளங்குகிறது. புராதன காலம் முதல் அரசியல் குணாம்சம் இல்லாத யுத்தமே இருந்ததில்லை.... ஒரு வார்த்தையில் கூறினால் யுத்தம் ஒரு கணத்திற்குக்கூட அரசியலிலிருந்து பிரிக்க முடியாததாகும். ஆனால் யுத்தத்திற்கு அதற்குரிய சிறப்பான குணாம்சங்களும் உண்டு. இந்த அர்த்தத்தில் யுத்தத்தைப் பொதுவாக அரசியலுடன் சமப்படுத்த முடியாது. ''சிறப்பான நடவடிக்கைகளின் மூலம் அரசியலின் நீடிப்பே யுத்தம் என்பது''. அரசியல் அதன் வழக்கமான வழிகளில் மேற்கொண்டு

படிப்பகம்

www.padippkam.com



முன்னேற முடியாத ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்கு வளர்ச்சி அடைந்ததும் அதன் பாதையில் உள்ள தடைகளை நீக்குவதற்காக யுத்தம் வெடிக்கிறது.... தடை அகற்றப்பட்டு அரசியல் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டால் யுத்தமும் முடிவடைகிறது. ஆனால் அத்தடைகள் முற்றாக நீக்கப்படவில்லையானால், அக்குறிக்கோள் பூரணமாக நிறைவேற்றப்படும் வரையில் யுத்தம் தொடர்ந்து நடைபெறும்.... எனவே அரசியலை ரத்தம் சிந்தாத யுத்தம் என்றும் யுத்தத்தை ரத்தம் சிந்தும் அரசியல் என்றும் கூறலாம்''

– 'மாசேதுங் மேற்கோள்கள் ' என்ற நூலிலிருந்து.

அரசியல் போராட்டத்திற்கும் ஆயுதப் போராட்டத்திற்குமான உறவைப் பற்றிய மேற்கண்ட மார்க்சிய கோட்பாடு அனைத்து நாடுகளுக்கும் பொருந்துகின்ற அனைத்தும் தழுவிய கோட்பாடாகும். இக் கோட்பாட்டையே குறிப்பான ஒரு நாட்டின் புரட்சியில் அரசியல் போராட்டத்திற்கும் ஆயுதப் போராட்டத்திற்குமான உறவு பற்றி பருண்மையாகத் தீர்மானிக்கப் பயன்படுத்த வேண்டும்.

பிற்போக்கு ஆளும்வர்க்கங்கள் பல்வேறுபட்ட எதிர்ப்புரட்சிகர, பிற்போக்குவாத கருத்துக்களை, சித்தாந்தங்களை, நிறுவனங்களைப் பரப்பி பெரும்பாலான மக்களைத் தம்பின் அணிதிரட்டிக் கொண்டுள்ளன. சாதிகள், மதங்கள், பாராளுமன்றவாத முதலாளிய அரசியல் கட்சிகள், திரிபுவாதக் கட்சிகள் மற்றும் பல சமூக, கலாச்சார நிறுவனங்கள் ஆளும் வர்க்கங்களுக்கு ஆதரவான அரசியல் படையை உருவாக்கி நிறுத்தி வருகின்றன. பாட்டாளி வர்க்க இயக்கம் இத்தகைய பிற்போக்கான, எதிர்ப்புரட்சிகர கருத்துக்களிலிருந்தும் நிறுவனங்களிலிருந்தும் மக்களை விடுவிக்காமல், புரட்சிகர முற்போக்கான கருத்துக்களில், அமைப்புகளில் மக்களை அணிதிரட்டாமல் எதிரியை அழித்தொழிக்கும், அவர்களுடைய அரசியல் அதிகாரத்தைத் தூக்கிஎறியும் யுத்தத்தைத் தொடுப்பது என்பது சாத்தியமில்லை. எனவே கட்சித்திட்டத்தில் குறிக்கப்பட்டிருக்கும் இலக்கை நோக்கி கட்சியின் சரியான அரசியல் மூலவுத்தி மற்றும் செயலுத்தி கோட்பாடுகளின் அடிப்படையிலான செயல்பாடுகள் மூலம் பரந்துபட்ட மக்களை அரசியல்படுத்தவும், புரட்சியை நோக்கி அமைப்பாகத் திரட்டவும், பாட்டாளி வர்க்க இயக்கம் முக்கியமான கவனம் செலுத்த வேண்டும். அரசியல் பிரச்சாரங்களையும், அமைப்புகளையும், போராட்டங்களையும் நாடெங்கும் கட்டமைக்க தீவிரமான கவனம் எடுத்துக் கொள்ளவேண்டும். புரட்சியின் மிக முக்கியமான பகுதியை, பெரும்பகுதியை இவ்வகையில் அரசியல்



போராட்டத்தின் மூலம் நிறைவேற்றுவது அவசியமாகும். அரசியல் போராட்டம் தீவிரமாக முன்னேறும் பகுதிகளில் அப்போராட்டம் மேலும் முன்னேறிச் செல்ல ஆயுதமேந்திய தற்காப்புக் குழுக்கள் தேவைப்படும். அரசியல் போராட்டத்தின் மீதான எதிரிப்படைகளின் (அரை ராணுவ அமைப்புகள்) தாக்குதலைத் தடுக்கவும் தாமதப்படுத்தவும் செங்காவலர் குழுக்கள் தேவைப்படும். அரசியல் போராட்டத்தின் வளர்ச்சியுடன் கூடவே அவசியமான இடங்களில் இவை அனைத்தும் திட்டமிட்டுக் கட்டப்பட வேண்டும்.

ஒரு கட்டத்தில் அரசியல்போராட்டம் எதிரிவர்க்க அரசியல் அதிகாரத்தை தூக்கிஎறியும் நிலைக்கு முன்னேறும் போது எதிரியின் ஸ்தாபனப்படுத்தப்பட்ட, பலாத்கார அமைப்பை (அரை ராணுவ, ராணுவ அமைப்புக்களை) நொறுக்கி எறிய பாட்டாளி வர்க்க இயக்கத்திற்கும் ஸ்தாபனப்படுத்தப்பட்ட, பலம்வாய்ந்த, பலாத்கார அமைப்பு (செஞ்சேனை) தேவைப்படும், பாட்டாளி வர்க்க இயக்கத்தை ஒடுக்க முயற்சிக்கும், எதிரி வர்க்கத்தின் அரசு எந்திரத்தை தற்காப்புக்காக மட்டுமின்றி, எதிரிவர்க்க அரசு அதிகாரத்தை அடித்து நொறுக்கிவிட்டு பாட்டாளி வர்க்க இயக்கத்தின் அரசியல் அதிகாரத்தை நிறுவவும் தொடர்ந்து எதிர்ப்புரட்சிகர வர்க்கங்களை நசுக்கவும் பாட்டாளிவர்க்க இயக்கத்திற்கு இத்தகைய புரட்சிகர, ஸ்தாபனப் படுத்தப்பட்ட, பலாத்கார அமைப்பு (செஞ்சேனை) தேவைப்படும்.

மக்களின் புரட்சிகர அரசியல் அதிகாரத்தை நிறுவுவதையும், நிலைநிறுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு செஞ்சேனை தோன்றுகிறது. இந்நிகழ்ச்சிப் போக்கில் ஆயுதப் போராட்டம் பல கட்டங்களைக் கடப்பதாக இருக்கும். புரட்சியின் ஆயுதம் ஏந்திய அமைப்புகளின் வளர்ச்சிக்கேற்ப அரசியல் போராட்டத்தின் வளர்ச்சியைக் காப்பதற்கான ஆயுதமேந்திய தற்காப்புக் குழுக்கள் மற்றும் பிரச்சாரக் குழுக்களின் தற்காப்பு நடவடிக்கைகள் எனவும் எதிரியின் அரசியல் அதிகாரத்தை வீழ்த்திவிட்டு மக்களின் புரட்சிகர அரசியல் அதிகாரத்தை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டு எதிரியின் ராணுவ, அரை ராணுவ அமைப்புகளுடன் மோதும் பாட்டாளி வர்க்கத்தின் ஆயுதம் ஏந்திய, பலாத்கார அமைப்புகளான கொரில்லாப் படைகளின் கொரில்லா நடவடிக்கைகள் எனவும், பிரதேச அளவிலான செந்தள அரசியல் அதிகாரத்தைக் காக்கவும், அதை பரப்பவுமான பிரதேச செஞ்சேனையின் போர் மற்றும் முறையான செஞ்சேனையின் போர் எனவும் பல்வேறு கட்டங்களாக ஆயுதப் போராட்டம் முன்னேறும்.

படிப்பகம்

www.padippkam.com



அரசியல் போராட்டத்திற்கும் ஆயுதப் போராட்டத்திற்கும் இடையில் உள்ள உறவு புரட்சிகர போர் முடியும்வரை ஒரே வகைப்பட்டதாய் இருக்காது. ஆயுதப் போராட்ட வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் அது அரசியல் போராட்டத்துடன் கொள்ளும் உறவு வேறுபட்டதாகவே இருக்கும்; எனினும் எல்லாக் காலத்திலும் அரசியல் போராட்டத்திற்கும் ஆயுதப் போராட்டத்திற்கும் இடையிலான பொது உறவாக இருப்பது அரசியல் போராட்டத்தின் இலட்சியங்களை (திட்டத்தின் இலட்சியங்களை) உயர்ந்த வடிவமான யுத்தத்தின் மூலம் ஆயுதப் போராட்டம் தீர்க்கிறது என்பதுதான்.

பொதுவாக அரசியல் போராட்டத்திற்கும் ஆயுதப் போராட்டத்திற்கும் இடையிலான உறவு புரட்சி யுத்தம் முடியும் வரையிலும் ஆயுதப் போராட்டத்தின் வளர்ச்சிக்கேற்ப கீழ்க்கண்டபடி அமையும் எனலாம்.

1) சரியான அரசியல் மூலவுத்தி மற்றும் செயலுத்திகளின் வழிகாட்டல்களின் கீழ் நீடித்த, தீரமிக்க அரசியல் போராட்டங்கள் நடத்தப்பட்டு, பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் சக்தி வாய்ந்த அரசியல் படை நாடெங்கும் பெரும் பகுதிகளில் கட்டப்பட்டு, அத்தகைய அரசியல் போராட்டங்களை மேற்கொண்டு முன்னெடுத்துச் செல்வதற்கு எதிர்ப்புரட்சி வர்க்கங்களின் வன்முறை அமைப்புகளின் பலாத்காரத்தை முறியடிக்க வேண்டிய அவசியம் ஏற்படும்போது ஆயுதமேந்திய குழுக்கள் பிரச்சாரக் குழுக்களாகவும், பாதுகாப்புக் குழுக்களாகவும் இருக்கும். அரசியல் போராட்டத்தைப் பாதுகாப்பதும் அதற்கு உதவுவதும்தான் இக்குழுக்களுக்கு ஒரே பணி. இக்கட்டம் வரையிலும் அரசியல் போராட்டமும், அரசியல் போராட்ட ஸ்தாபன வடிவமுமே பிரதானமானதாக இருக்கும்.

2) அரசியல் போராட்டத்தின் தொடர்ச்சியாய் புரட்சிகர அரசியல் அதிகாரத்தை நிறுவுவதற்காகவும், காப்பதற்காகவும் எதிரியின் படைப்பிரிவுகளுடன் ராணுவ முறையில் மோதும் நிலையில் கொரில்லாக் குழுக்கள் கட்டப்படும். இவற்றின் ஆரம்ப நிலையில் மக்களின் உக்கிரமான அரசியல் போராட்டங்களோடு, அன்றாட அரசியல் நடவடிக்கைகளோடு, அரசியல் செயலுத்தியோடு இக்குழுக்களின் நடவடிக்கைகள் பிணைக்கப்பட்டிருக்கும். இக்கட்டத்தில் அரசியல் போராட்ட வடிவங்கள் மற்றும் ஸ்தாபன வடிவங்களும், அமைப்பு வடிவங்களும் முக்கியத்துவம் பெற்றதாய்இருக்கும்.



3) கொரில்லாக் குழுக்கள் வளர்ந்து புரட்சிகர சிவப்பு அரசியல் அதிகாரம் நிறுவப்பட்ட பின் அதைக் காக்கவும் மேலும் பரவவுமான போரில் கொரில்லாப்படை, பிரதேச ராணுவம், செஞ்சேனை ஆகியவற்றின் போர் நடவடிக்கைகள் நேரடியாக அரசியல் போராட்டத்துடன் இணைந்திருப்பதில்லை. மாறாக, கட்சித்திட்டம் மற்றும் புரட்சிகர ஐக்கிய முன்னணியின் அரசியல், பொருளாதார திட்டத்தை நிறைவேற்றுவதற்கான, சிவப்பு அரசியல் அதிகாரத்தை நிறுவுவதற்கான நேரடி ராணுவ நடவடிக்கைகளாக பெரும்பாலும் மாறியிருக்கும். அதாவது இவற்றின் நடவடிக்கைகளை ராணுவ மூலவுத்தியும், செயலுத்தியும் தீர்மானிப்பதாக இருக்கும். இக்கட்டத்தில் ஆயுதப் போராட்டம் பிரதானமானதாக மாறியிருக்கும்.

### ஆ) படை கட்டுவது பற்றி :

அரசியல் போராட்ட வளர்ச்சியின் குறிப்பிட்ட கட்டத்தில் நாடு தழுவிய அல்லது பிரதேசந் தழுவிய அரசியல் எழுச்சிகள் நடத்தப்படும்போது அது வெற்றிகரமாக அமைய அரசியல் போராட்டக் கமிட்டிகளும், போராட்டங்களுக்குத் துணையாக ஆயுதம் தாங்கிய தற்காப்புக் குழுக்களும், ஆயுதம் தாங்கிய பிரச்சாரக் குழுக்களும் கட்டப்படும். இக்குழுக்கள் போராட்டங்களின் வெற்றிக்காக தற்காப்புப்பணியில் ஈடுபடும் போதே மேலும் வெற்றிகளைப் பெறவும், ஸ்தாபனப்படுத்திக் கொள்ளவும் செங்காவலர் குழுக்களாக வளரும். அதே நேரத்தில் தற்காப்புக் குழுக்களும், ஆயுதம் தாங்கிய பிரச்சாரக் குழுக்களும் தொடரும். செங்காவலர் குழுக்கள் எதிரிகளின் தொல்லைகளைத் தடுப்பது, எதிரிகளின் படைகளுக்குத் தொல்லை தருவது ஆகிய பணிகளைச் செய்யும். செங்காவலர் குழுக்கள் திட்டமிட்டு, எதிரியை பலவீனப்படுத்தவும் தாக்குதலை முறியடிக்கவும் எதிரியை தாக்கி தொல்லை கொடுப்பது, செய்திப் போக்குவரத்துக் களைத் துண்டிப்பது தாக்குதல் வேகத்தைத் தடுப்பது போன்றவற்றைச் செய்யும். போராட்ட இயக்கங்களின் வளர்ச்சியில் எதிரியின் அரசியல் அதிகாரத்தை வீழ்த்திவிட்டு மக்களின் அரசியல் அதிகாரத்தை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டு எதிரியின் ஆயுத அமைப்புகளோடு (இராணுவ அமைப்புகளுக்குக் கீழ்ப்பட்ட போலீஸ் போன்ற அரை ராணுவ அமைப்புகளோடு) மோதும் நிலை ஏற்படும்போது அவற்றிலிருந்து கொரில்லாக் குழுக்கள் கட்டப்படும். இவை அனைத்தும் அரசியல் நடவடிக்கைகளுடன் இணைந்தே, அவற்றின் வளர்ச்சியையும், வெற்றியையும், நோக்கமாகக் கொண்டே நடத்தப்படும். இத்தகைய போராட்டங்களும், கொரில்லாக் குழுக்களும் பரவலாக ஒரு பகுதியில்

படிப்பகம்

www.padippkam.com



செயல்படும்போது அப்பகுதி கொரில்லாப்பகுதி* எனப்படும்.

இம்மாதிரியான வளர்ச்சிக்கு அப்பகுதியில் பலமான, சரியான கட்சி அமைப்பும், கொரில்லா நடவடிக்கைகளுக்கு அரசியல் வகையில் உதவக்கூடிய மக்கள் ஆதரவும், பங்கேற்பும் வெகுவாக இருக்க வேண்டியது அவசியமான நிபந்தனையாகும். இத்தகைய நிலைமைகள் வளர்ச்சி அடைந்திருக்கும் பிரதேசங்களில் மேலும் கூடுதலாக எதிரிகளுக்கு இடையிலான முரண்பாடு கூர்மையடைந்து, எதிரி மக்களிடமிருந்து அரசியல் வகையில் தனிமைப்பட்டு, சமரசச் சக்திகள் மக்களிடம் அம்பலப்பட்டு, தேசிய, சர்வதேசிய அளவில் எதிரி கடும் நெருக்கடிக்குள்ளாகி இருக்கும் சாதகமான நிலையில் திட்டமிட்ட ஆயுத எழுச்சிகளை நடத்தி சிவப்பு அரசியல் அதிகாரத்தை பல்வேறு மட்டங்களிலும் நிறுவ வேண்டும். இத்தகைய சிவப்பு அரசியல் அதிகாரத்தை நிறுவுவதற்கும், உறுதிப்படுத்தி பரப்புவதற்கும் வட்டார செங்காவலர் படைகளையும், மாவட்ட செங்காவலர் படைகளையும், பிரதேச செங்காவலர் படைகளையும், உழவர், தொழிலாளர் எழுச்சிப் படைகளையும் கட்ட வேண்டும். இவை பிரதேச மற்றும் வட்டார சிவப்பு அரசியல் அதிகாரத்தை கட்டிக்காப்பதற்கான ஆயுதம் தாங்கிய படைகளாகும். மேலும் இவற்றிலிருந்து பிரதேச செஞ்சேனையையும், முறையான செஞ்சேனையையும் படிப்படியாக கட்டமைக்க வேண்டும். செஞ்சேனைகளின் வளர்ச்சியும் தேச முழுவதும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் அதன் வெற்றியும் செஞ்சேனை கட்டப்பட்ட பின் அப்போது நிலவும் புரட்சிகர, எதிர்ப்புரட்சிகர சக்திகளின் இராணுவ பல நிலை, பூகோள நிலை, தேசிய, சர்வதேசிய அரசியல் நிலை ஆகியவற்றை சரியாகக் கணக்கீடு செய்து வகுக்கப்படும் சரியான அரசியல் செயலுத்திகளையும், இராணுவ மூலவுத்தி, செயலுத்திகளையும் அவற்றை சரியாக செயல்படுத்துவதையும் பொறுத்தே அமையும்.

---

* கொரில்லாக் குழுக்களின் நடவடிக்கைகள் மிகுந்திருக்கும் அதே நேரத்தில் சிவப்பு அரசியல் அதிகாரம் நிறுவப்படாத பகுதியாகும். தளப்பிரதேசமாக மாற்றப்படுவதற்கு முன் சிவப்பு அரசியல் அதிகாரத்தை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டு கொரில்லா போராட்டங்கள் நடத்தப்படும் பகுதிகள் கொரில்லாப் பிரதேசங்கள் எனப்படுகின்றன. கொரில்லாப் பிரதேசங்களில் மக்களின் பல்வேறு மக்கள்திரள் அமைப்புகள் அமைக்கப்பட்டு வெகுஜனங்கள் நடவடிக்கைகளுக்கு எழுச்சியுறுத்தப்பட்டு. எதிரிகளின் பெருந்தொகையான துருப்புகள் அழிக்கப்பட்டு. எதிரிவர்க்க ஆட்சி அதிகாரம் அழிக்கப்பட்டு. மக்களின் புரட்சிகர சிவப்பு அரசியல் அதிகாரம் நிறுவப்படும் போது அவை தளப்பிரதேசங்கள் எனப்படுகின்றன. ஒரு கொரில்லாப் பகுதி தளப்பிரதேசமாக மாறுவது என்பது எந்த அளவுக்கு எதிரிகள் அழிக்கப்பட்டுள்ளனர். எந்த அளவுக்கு மக்கள் எழுச்சியுறுத்தப்பட்டுள்ளனர் என்பதைப் பொறுத்த விசயமாகும்.



**ஆயுதப் படைகள் கீழ்க்கண்டபடி அமையும் :**

**முறையான செஞ்சேனை :–** இது முழுவதும் எதிரியைத் துடைத்தொழிப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்படும் முழுமையான, முறையான இராணுவமாகும். போரிடுவதே இவர்களுடைய பிரதான பணியாய் இருக்கும். எதிரியின் ஒவ்வொரு தாக்குதலுக்கும் எதிர்த்தாக்கு தல் தொடுப்பதும், முன்னேறிச் சென்று தாக்கி எதிரி இராணுவத்தை அழிப்பதும் இதன் பணியாய் இருக்கும். உயர்ந்த ஆயுதங்களால் ஆயுதபாணியாக்கப்பட்டிருக்கும். நகர்ந்து செல்வதிலும் போரிடும் திறமையிலும் பலமானதாகவும், திறமை வாய்ந்ததாகவும், பயிற்சி பெற்றதாகவும் இருக்கும்.

**பிரதேச செஞ்சேனை :–** இது முறையான செஞ்சேனையுடன் இணைந்த ஒரு பகுதியாக இருக்கும். இதுவும் போரிடுவதை மட்டுமே பணியாகக் கொண்ட வீரர்களைக் கொண்டதாய் இருக்கும். பிரதேச அமைதியையும், சமூக ஒழுங்கையும் நிலைநாட்டுவதும், எதிரிகளின் பிரதேச ஆயுத அமைப்புகளை (போலீஸ் போன்ற அரை இராணுவ அமைப்புகளை) முற்றாக முறியடித்து பிரதேச சிவப்பு அரசியல் அதிகாரத்தைக் காப்பதும் இதன் பணியாகும். அவசியமான நேரங்களில் செஞ்சேனையுடன் இணைந்து எதிரிகளின் இராணுவத்துடன் தாக்குதலில் ஈடுபடும்.

**பிரதேச ஆயுதப்படைகள் :–** இது மூன்றுவகையாக இருக்கும்.

1. ***கொரில்லாப் படைகள் :–*** பிரதேச ஆயுதப்படைகளில் தீவிரமாகவும், திறமையாகவும் போரிடக் கூடியவர்களைக் கொண்டு கொரில்லாப் படைகள் அமைக்கப்பட்டிருக்கும். இப்படைகளில் இருப்பவர்கள் பகுதி நேரமாக உற்பத்தியில் ஈடுபடுகின்றவர்களாக இருப்பர். பிரதேச அரசியல் அதிகாரத்தைக் காப்பது இதன் நோக்கமாகும்.

2. ***செங்காவலர் படைகள் :–*** முறையாக உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் புரட்சிகர வெகுஜனங்களின் ஆயுதம் தாங்கிய பிரிவினர் செங்காவலர் படைகளாக அமைக்கப்படுவர். பிரதேச அரசியல் அதிகாரத்தைக் காப்பதுதான் இவர்களுடைய பணியும் ஆகும். தீவிரமான போராட்டங்கள் நடக்கும் இடங்களில் இவர்கள் பங்கு கொள்வார்கள். பெரும்பாலும் 20–30 வயதுக்குட்பட்டவர்களாக இருப்பர்.

3. ***விவசாயி – தொழிலாளர்களின் எழுச்சிப் படைகள் :–*** இது உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகள் மற்றும் கைவினைஞர்கள்,

படிப்பகம்

www.padippkam.com



சிறு தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் ஆயுதம் தாங்கிய புரட்சிகர பிரிவினரைக் கொண்டு கட்டப்படுவதாகும். பெரும்பாலும் 30 – 45 வயதுக்குட்பட்டவர்களைக் கொண்டதாய் இருக்கும். இப்படையின் பணி வட்டார அளவிலான சிவப்பு அரசியல் அதிகாரத்தைக் காப்பதாகும்.

பிரதேச ஆயுதப் படைகள் பிரதேச கட்சி அமைப்புகளால் தலைமை தாங்கப்படுவதாக இருக்கும். முறையான செஞ்சேனைக்கு ராணுவத்திலிருக்கும் கட்சிக் கமிட்டிகள் தலைமை தரும். பிரதேச கட்சிக் கமிட்டிகளின் செயல்பாடுகள் பெரும்பாலும் சுதந்திரமானதாக இருப்பினும் பிரதேச கட்சிக் கமிட்டிகளும், ராணுவக் கட்சிக் கமிட்டிகளும் மத்திய கமிட்டியின் ஒருங்கிணைந்த தலைமையின் கீழ் இருக்கும். ராணுவத்தில் அனைத்து மட்டங்களிலும் கட்சிக் கமிட்டிகளைக் கட்டுவது, அரசியல், சித்தாந்தப் பணிகளை முறையாகச் செய்வது, ஆகியவற்றின் மூலம் ராணுவத்தில் கட்சியின் தலைமை நிறுவப்பட்டிருக்கும். இராணுவத்தில் ஜனநாயக முறைகளைக் கடைப்பிடிப்பதும், இராணுவத்தின் வீரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் ஒரே அரசியல் நோக்கம் இருப்பதும், அவர்கள் பெரும்பாலும் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களிடமிருந்து வந்தவர்களாய் இருப்பதும், அவர்கள் தமது அரசியல், பொருளாதார, கலாச்சார நலன்களுக்காகவே புரட்சியில், இராணுவப் பணியில் ஈடுபட்டிப்பதும் செஞ்சேனை வெல்லப்பட முடியாத பலம் கொண்டதாக இருப்பதற்குக் காரணங்களாகின்றன.

## இ) சிவப்பு அரசியல் அதிகாரத்தை நிறுவுவது பற்றி:

சீனாவில் சிவப்பு அரசியல் அதிகாரம் தோன்றியதற்கும் அது நிலைத்திருப்பதற்குமான காரணங்கள் என்று தோழர் மாவோ கீழ்க்கண்டவற்றைக் கூறுகிறார்.

1. ''வெள்ளை ஆட்சியினுள்ளேயே நீண்டகாலம் நீடிக்கும் பிளவுகளும், யுத்தங்களும்* வெள்ளை ஆட்சியின் சுற்றி வளைப்பின் மத்தியில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட செம்பிரதேசங்கள் தோன்றுவதற்கும் நின்று நிலைப்பதற்குமான ஒரு சூழ்நிலையைத் தருகின்றன!''

* இது இருப்பதற்கு 'இரண்டு காரணங்கள் அதாவது(ஒருமுகப்பட்ட முதலாளித்துவப் பொருளாதாரமல்லாத) ஸ்தலவாரியான ஒரு விவசாயப் பொருளாதாரமும், நாட்டைத் தமக்குள் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக்கொண்டு சுரண்டும் ஏகாதிபத்தியங்களின் கொள்கையுமே காரணம்' என அதே கட்டுரையில் மாவோ குறிப்பிடுகிறார்.



2. ''இந்த மாகாணங்களின் பல பகுதிகளில் தொழிற்சங்கங்களும் விவசாயச் சங்கங்களும் பரவலான அளவியில் உருவாக்கப்பட்டு தொழிலாளி வர்க்கத்தாலும் விவசாயி வர்க்கத்தாலும், நிலப்பிரபுத்துவ வர்க்கத்திற்கும், முதலாளித்துவ வர்க்கத்திற்கும் எதிராகப் பல பொருளாதார, அரசியல் போராட்டங்கள் நடத்தப்பட்டன.... தற்போதைய செஞ்சேனையைப் பொறுத்தவரையில் அது, ஜனநாயக அரசியற் பயிற்சிக்கு ஊடாகச் சென்றதும் தொழிலாளி, விவசாயி வெகுஜனங்களின் செல்வாக்கின் கீழ் வந்ததுமான தேசியப் புரட்சிகர சேனையிலிருந்து பிளவுபட்டு வந்ததாகும்.''

3. ''சிறு பிரதேசங்களிலான மக்களின் அரசியல் அதிகாரம் நீண்ட காலம் நின்றுபிடிப்பது சாத்தியமா என்பது தேசம் தழுவிய புரட்சிகர நிலைமை தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிறதா என்பதால் நிர்ணயிக்கப்படும்''.

4. ''தொழிலாளி, விவசாயி வெகுஜனங்கள் தீவிரமாக உள்ளபோதுகூட எமக்கு போதிய பலமுள்ள முறையான செஞ்சேனை இல்லாமலிருந்தால் நிலைத்து நிற்க வல்லதும் நாளுக்கு நாள் வளர்வதுமான ஒரு சுதந்திர ஆட்சி ஒரு புறம் இருக்க, எந்தவிதமான சுதந்திர ஆட்சியையுமே நிறுவுவது சாத்தியமற்றதாகும்.''

5. ''சிவப்பு அரசியல் அதிகாரம் மிக நீண்ட காலம் நிலைத்து நிற்பதற்கும் வளர்வதற்கும் மற்றும் ஒரு முக்கிய சூழ்நிலையாக கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபனம் பலமாயும் அதன் கொள்கை சரியானதாகவும் இருப்பது அவசியமாகும்''. (சீனாவின் சிவப்பு அரசியல் அதிகாரம் இருக்க முடிவது ஏன்? – மாவோ)

சீனத்தில் சிவப்பு அரசியல் அதிகாரம் (சுற்றிலும் வெள்ளை ஆட்சி சூழ்ந்திருக்கும் நிலையில்) நிறுவப்பட்டதற்கும், அது நிலைத்து நின்று வளர்வதற்குமான காரணம் என்று தோழர் மாவோ மற்றொரு கட்டுரையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

''சிவப்பு அரசியல் அதிகாரத்தின் கீழான சிறு பிரதேசம் ஒன்றோ அதற்கு மேற்பட்டவையோ அவற்றைச் சூழ்ந்திருக்கும் வெள்ளை ஆட்சியின் நடுவில் தோன்றியுள்ள ஒரே ஒரு நாடு இன்று உலகில் சீனா ஒன்றுதான். இந்த நிகழ்ச்சிக்குக் காரணம் சீனாவின் தரகு முதலாளி, உள்ளூர் கொடுங்கோலர், தீய பிரபு வர்க்கங்களுக்குள்ளேயே நிலவும் இடையறாத பிளவுகளும், யுத்தங்களுமாகும் என ஆராய்கையில் எமக்குப் புலப்படுகிறது. இந்தப் பிளவுகளும், யுத்தங்களும்

படிப்பகம்

www.padippkam.com



தொடர்கின்றவரை தொழிலாளர்களினதும், விவசாயிகளினதும் ஆயுதம் தாங்கிய சுதந்திர ஆட்சி ஒன்று தொடர்ந்து பிழைத்திருப்பதும் வளர்வதும் சாத்தியம். இத்துடன் கூடவே அது பிழைத்திருப்பதற்கும் வளர்வதற்கும் பின்வரும் சூழ்நிலைகள் தேவை :

1. உறுதியான வெகு ஜன அடித்தளம்
2. சரியான ஒரு கட்சி ஸ்தாபனம்
3. கணிசமான அளவு பலம் வாய்ந்த ஒரு செஞ்சேனை
4. ராணுவ நடவடிக்கைகளுக்குச் சாதகமான தரையமைப்பு
5. நிலைத்து நிற்பதற்குப் போதுமான பொருளாதார வளங்கள் ."

(சிங்காங் மலைகளிலான போராட்டம், 1928 நவம்பர் 25.)

சீனத்தில் தளப்பிரதேசங்கள் அமைப்பதற்கு மலைகள் காடுகள் நிறைந்த பகுதிகளும் நதி தீரப்பகுதிகளும் அதிக வசதியானவை (ஏனெனில் அவை எதிரிகளின் ராணுவத் தாக்குதலைக் கடினமாக்கும்) என மாவோ குறிப்பிட்டார். மலையும், காடுகளும் அடர்ந்த பகுதிகள் மற்றும் நதி தீரப் பகுதிகள் என்பவை வளர்ந்துவிட்ட பெரிய நவீன ராணுவத்தின் முன் மக்கள் படைக்கு ஒரு பாதுகாப்பு அம்சமாக அமையும் என்பது உண்மையெனினும் ''நவீன சாதனங்கள் இருந்தால் ராணுவம் மற்றும் அதன் போர் நடவடிக்கைகள் ஆகிய இரண்டிலுமே ஒரு பெரிய மாற்றம் ஏற்படும்'' என்றும் ('சீனப்புரட்சியின் புரட்சிகர யுத்தத்தின் மூலவுத்தி பிரச்சினைகள் ' என்ற கட்டுரையில்) மாவோ கூறியிருக்கிறார்.

## தளப்பிரதேசத்தில் அரசியல் அதிகாரம் :

தளப்பிரதேசத்தில் அரசியல் அமைப்பு, ஐக்கிய முன்னணி வர்க்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்டதாய் இருக்கும். இவர்கள் ஜனநாயகப் பூர்வமான தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப் படுவர். பகுதி, தொழில் அடிப்படையில் பிரதிநிதித்துவம் வழங்கப் பட்டிருக்கும். ஜனநாயக மத்தியத்துவ அடிப்படையில் இயங்கும். கீழிருந்து மேல் வரை வெவ்வேறு மட்டங்களில் (வட்டார, மாவட்ட பிரதேச மட்டங்களில்) இந்த அதிகார அமைப்புகள் அமைக்கப் பட்டிருக்கும். இவையே மக்கள் அதிகாரத்திற்கான அதிகார அமைப்புகளாகும். இவ்வமைப்புகள்,

1. பிரதேச இராணுவ போராட்டங்களுக்குத் தலைமை தாங்குவது, பிரதேச ஆயுதப் படைகளைத் திரட்டுவது, யுத்த முனைக்கு ஆதரவாக மக்களைத் திரட்டுவதற்கான பணிகளைப் பொறுப்பேற்றுச் செய்வது, பொது அமைதியையும், ஒழுங்கையும் பாதுகாப்பது, பிற்போக்கின் மிச்ச சொச்சங்களை ஒழிப்பது ஆகிய பணிகளையும்,



2. பொருளாதார, கலாச்சார அரங்கிற்கான கட்டுமானப் பணிகளுக்கு மக்களைத் திரட்டுவது, நில விநியோகம், உற்பத்திப் பணிகள் போன்றவற்றிற்கு மக்களைத் திரட்டுவது போன்ற பணிகளையும் பொறுப்பேற்றுச் செய்யும். மொத்தத்தில் தளப்பிரதேசத்தின் அனைத்து பிரச்சினைகளுக்கும் பொறுப்பேற்றிருக்கும்.

இவை கட்சியின் ஐக்கிய முன்னணிக் கொள்கையை அரசியல், பொருளாதார, இராணுவ அரங்குகளில் கறாராக நடைமுறைப்படுத்தும்.

**தொகுப்பாகக் கூறினால், சிவப்பு அரசியல் அதிகாரத்தை (தளப்பிரதேசம்) நிறுவவும் அது நிலைத்து நிற்கவும் கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவது அடிப்படையான விசயங்கள் எனக்கூறலாம்:**

1) சரியான அரசியல், இராணுவ கொள்கைகளைப் பெற்றிருக்கும் பலம் வாய்ந்த, புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சி.

2) கட்சியின் தலைமையில் அமைப்பு முறையில் திரண்டிருக்கும் தொழிலாளிகள், விவசாயிகள் மற்றும் புரட்சிகர வர்க்கங்களின் பரந்துபட்ட பலமான வெகுஜன அடித்தளம்.

3) கட்சியின் தலைமையிலான ஆயுதப்படைகள்– குறிப்பாக போதிய பலம் வாய்ந்த செஞ்சேனை.

4) ஆளும் வர்க்கங்களின் அரசாங்க இராணுவ அமைப்புகளில் கட்சி திட்டமிட்டு ஊடுருவி அரசியல் அமைப்பு, சித்தாந்த பணிகளைச் செய்வது. மேலும் ஆளும் வர்க்கங்கள் தேசிய, சர்வதேசிய நெருக்கடிகளில் சிக்கி இருப்பது, அரசு எந்திரத்திற்குள், இராணுவ, அரைஇராணுவ அமைப்புகளுக்குள் முரண்பாடு தீவிரமடைந்திருப்பது, பாராளுமன்றவாத, திரிபுவாதக் கட்சிகள் மக்களிடமிருந்து தனிமைப்பட்டிருப்பது, ஆளும் வர்க்கங்களுக்குள் முரண்பாடுகள் முற்றியிருப்பது, மக்கள் போராட்ட அலை மேல்நோக்கி வளர்முகமாய் இருப்பது போன்ற சூழ்நிலைகள்.

இவை சிவப்பு அரசியல் அதிகாரத்தை நிறுவவும், நிலை நாட்டவும், பரப்பவும் அவசியமாகும்.

படிப்பகம்

www.padippkam.com



# 10

# கட்சியும் மக்கள் திரள் அமைப்புகளும்

" கட்சி என்பது தொழிலாளி வர்க்கத்தின் அமைப்பு முறையில் உருவாக்கப்பட்ட படைப்பகுதியாகும். ஆனால், தொழிலாளி வர்க்கத்துக்குள்ள ஸ்தாபனம் கட்சி மட்டுமல்ல அதோடு வேறுபல அமைப்புகளும் தொழிலாளி வர்க்கத்துக்கு உள்ளன – தொழிற் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், தொழிற்சாலை பணி அமைப்புகள், சட்டசபைக் குழுக்கள், கட்சியில் இல்லாத மாதர் சங்கங்கள், பத்திரிகை வெளியீட்டகங்கள், கலாச்சார – கல்வி நிறுவனங்கள், வாலிபர் கழகங்கள், பகிரங்கப் புரட்சிக் காரியங்கள் நடக்கும் காலத்தில் புரட்சிக்காகப் போராடும் அமைப்புகள், தொழிலாளி வர்க்கம் அதிகாரத்தில் இருந்தால் அரசு ஸ்தாபன அமைப்பின் வடிவமாகப் பிரதிநிதிகளைக் கொண்ட சோவியத்துகள் முதலானவை. இவை எல்லாம் இல்லாமல் பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவத்தை எதிர்த்து சரியாகப் போராட்டத்தை நடத்த முடியாது. இந்த அமைப்புகளில் மிகப் பெரும்பான்மையானவை கட்சி சார்பற்றவை. சில மட்டுமே நேரடியாகக் கட்சியுடன் நட்புக் கொண்டிருப்பவை அல்லது கட்சியிலிருந்து கிளையாகப் பிறந்தவை".

(லெனினிசத்தின் அடிப்படை அம்சங்கள் – ஸ்டாலின்)

கட்சி பாட்டாளி வர்க்கத்தின் ஒரு அமைப்பாக இருக்கும்போதே பாட்டாளிவர்க்கம் இன்னும் பல்வேறு மக்கள் திரள் அமைப்புகளையும் பெற்றிருக்கிறது. ஆனால் பாட்டாளி வர்க்கத்தின் உச்சநிலை வர்க்க அமைப்பு கட்சியே ஆகும்.

கட்சி பல்வேறு மக்கள் திரள் அமைப்புகள் மூலமாகவே மக்களை புரட்சிக்கு வழிநடத்திச் செல்கின்றது. இதன் பொருள் கட்சி மக்கள் திரள் அமைப்புகளை தனது அதிகாரப்பூர்வமான கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளது என்பதல்ல. கட்சி தலைமைக்கும் மக்கள் திரள் அமைப்புகளுக்கும் இடையிலான உறவு இராணுவ தளபதிக்கும் வீரர்களுக்கும் இடையில் உள்ளதைப் போன்றதோ தலைமைக் கமிட்டிக்கும், கீழ்க் கமிட்டிக்கும் இடையில் உள்ளதைப் போன்றதோ



அல்ல. மாறாக கட்சியின் தலைமையையும், வழிகாட்டுதலையும் மக்கள் திரள் அமைப்புகள் தமது சுயவிருப்பத்தின் பேரிலேயே ஏற்றுக் கொள்கின்றன. அவற்றை ஏற்றுக் கொள்வதற்கும் நிராகரிப்பதற்கும் மக்கள் திரள் அமைப்புகள், தாம் சுயமான ஸ்தாபனம் என்ற முறையில் முழுமையான ஜனநாயக உரிமை பெற்றுள்ளன. உண்மையில் மக்கள் திரள் அமைப்புகள் கட்சித் தலைமையையும், வழிகாட்டுதலையும் ஏற்றுக் கொள்வதற்கு இரண்டு விசயங்கள் அடிப்படைகளாக அமைகின்றன. (1) கட்சியின் சரியான தலைமை, கொள்கை, அனுபவம், செல்வாக்கு ஆகியவையும் (2) மக்கள் திரள் அமைப்புகளில் செயல்படும் கட்சி உறுப்பினர்கள் மக்கள் திரள் அமைப்புகளின் பணிகளில் ஊக்கமுடன் பங்கெடுத்துக் கொள்வது, முன்முயற்சியுடன் இருப்பது, அனைவருடனும் நெருங்கிய இடைவிடாத உறவுகளை ஏற்படுத்திக்கொள்வது, சரியான கருத்துக்களுக்காக இடைவிடாது போராடுவது ஆகியவையும் ஆகும்.மக்கள் திரள் அமைப்புகளில் பணியாற்றும் கட்சி உறுப்பினர்கள் இந்த அமைப்புகள் கட்சியிடம் நெருக்கமுற வரும்படி ஈர்ப்பதற்கும் கட்சியின் அரசியல் வழிகாட்டுதலை தாமாகவே மனமுவந்து ஏற்றுக்கொள்ளச் செய்தற்கும் பாடுபடுகின்றனர். கட்சியின் அரசியல் தலைமையை மற்ற எல்லா தொழிலாளி வர்க்க மக்கள் திரள் அமைப்புகளிலும் கட்சி இவ்வாறுதான் நிறுவுகிறது.

ஸ்டாலின் கூறினார் : ''இதற்கு அர்த்தம் கட்சியிலில்லாத ஸ்தாபனங்களை, தொழிற்சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் முதலானவற்றை கட்சித் தலைமைக்கு அதிகாரப்பூர்வமாக கீழ்ப்படுத்தி வைக்க வேண்டும் என்பது அல்ல. இந்த ஸ்தாபனங்களைச் சேர்ந்த, இந்த ஸ்தாபனங்களில் செல்வாக்குப் பெற்றுள்ள கட்சி அங்கத்தினர்கள் இந்த கட்சியிலில்லாத ஸ்தாபனங்களை அதனதன் வேலையைச் செய்கையில் தொழிலாளி வர்க்கக் கட்சியிடம் நெருங்கி வரும்படி ஈர்ப்பதற்கும் கட்சியின் அரசியல் வழிகாட்டுதலை தாமாகவே மனமுவந்து ஏற்றுக்கொள்ளும்படி செய்வதற்கும் தங்களால் (கட்சி உறுப்பினர்களால்) சாத்தியமாகிற அளவுக்குப் பாடுபட வேண்டும் என்பது மட்டுமே இதற்கு அர்த்தம்.'தொழிலாளி வர்க்கத்தின் வர்க்க ஸ்தாபனத்தின் உச்சநிலை வடிவமே கட்சி என்பது' மற்றெல்லா தொழிலாளி வர்க்க ஸ்தாபன வடிவங்களிடையேயும் அதன் அரசியல் தலைமை வியாபிக்க வேண்டும் என்று லெனின் சொல்வதும் இதனால்தான்.''

www.padippkam.com



**பல்வேறு மக்கள் திரள் அமைப்புகள் :**

கட்சி பல்வேறு மக்கள் திரள் அமைப்புகளைக் கட்டுவதன் நோக்கம் பிற்போக்கான கருத்துகளிலிருந்தும், அமைப்புகளிலிருந்தும் மக்களை மீட்பதும், எதிரிகளை மக்களிடமிருந்து தனிமைப்படுத்துவதும் புரட்சிகர அரசியல் சித்தாந்த அடிப்படையில் மக்களைப் பயிற்றுவிப்பதும், அரசியல் அதிகாரத்துக்கான போராட்டத்திற்கு தயார்படுத்துவதும், ஜனநாயக வாழ்க்கைக்கும், தம்மைத்தாமே நிர்வகித்துக் கொள்வதற்கும் பயிற்றுவிப்பதும், அரசியல் அதிகாரத்தை பாட்டாளி வர்க்கம் கைப்பற்றுவதும் புரட்சியை இறுதிவரை நடத்துவதும் ஆகும். எனவே மக்கள் திரள் அமைப்புகள் கட்சிக்கும் மக்களுக்கும் இடையிலான இணைப்புப் பாலங்களாக (Transmission belt) செயல்படுகின்றன என்றார் ஸ்டாலின். புரட்சி மக்களால் நிறை வேற்றப்படுவது; மக்கள் புரட்சிக்குத் தயாராகாமல் புரட்சி சாத்தியமில்லை. எனவே, மக்கள் திரள் அமைப்புகள் கட்டுவதன் நோக்கம் பிரதானமாக மக்களைப் புரட்சிக்கு பயிற்றுவிப்பதேயாகும். இதில் ஒவ்வொருவகை மக்கள் திரள் அமைப்புகளும் தத்தம் பங்கிற்கு இப்பணியை செய்கின்றன. எனவே கட்சி அரசியலும் மக்கள் திரள் அமைப்புகளின் அரசியலும் முரண்பட்டிருப்பதில்லை. மாறாக, மக்கள் திரள் அமைப்புகள் கட்சி அரசியலையே தத்தம் தன்மை மற்றும் எல்லைக்கேற்ப தமது கொள்கைத் திட்டங்களின் வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டிருக்கின்றன. அவ்வாறின்றி அவை புரட்சியில் தமது பங்குப் பணியை நிறைவேற்ற முடியாது.

**(1) வர்க்க மக்கள் திரள் அமைப்புகள் :**

மிகப் பின்தங்கிய வர்க்கப் பகுதியினரையும், முன்னேறிய பகுதியினருடன் இணைத்து எதிரியை தனிமைப்படுத்துவதற்கான சாதனமாகவும், புரட்சிகர அரசியலை – கம்யூனிசத்தை மக்களிடையே எடுத்துச் செல்வதற்கான பள்ளிக்கூடமாகவும், மக்கள் ஜனநாயக வாழ்வுக்கும் தம்மைத் தாமே நிர்வகித்துக் கொள்வதற்கும் பயிற்சி அளிக்கும் களனாகவும் வர்க்க மக்கள் திரள் அமைப்புகள் விளங்குகின்றன. வர்க்க மக்கள் திரள் அமைப்புகள் என்று குறிப்பிடும்போது பொதுவாகவும் முதன்மையாகவும் தொழிலாளர்கள், விவசாயிகள் வர்க்க அமைப்புகளையே குறிப்பிடுகிறோம். இவை கட்சியை உற்பத்தி மற்றும் பொருளாதார அரங்குகளில் அடிப்படை மக்களுடன் தொடர்பு படுத்துகிறது.



**(2) மக்கள்பிரிவினர் மக்கள் திரள் அமைப்புகள்:**

இளைஞர்களும் மாணவர்களும் பெண்களும் குறிப்பான வர்க்கத்தை சேர்ந்தவர் அல்லர். எல்லா வர்க்கங்களிலிருந்தும் இருக்கக்கூடிய மக்கள் பிரிவினர் ஆவர். சமூக அரங்கில் இவர்கள் வகிக்கும் பாத்திரத்தை இவர்கள் உணரும்படி செய்யவும், சமுதாய மாற்றப் பணியில் இவர்கள் தீவிரமாக ஈடுபடச் செய்யவும், இதன் முன்னேறிய பிரிவினருடன் பின்தங்கிய பிரிவினரையும் இணைத்து ஆளும் வர்க்கப் பிரிவுகளை எதிர்த்து அமைப்பு முறையில் போராடச் செய்யவும், ஜனநாயக வாழ்க்கைக்கு பயிற்றுவிக்கவும் இப்பகுதியினருக்கான தனித்தனி மக்கள் திரள் அமைப்புகள் கட்டப்படுகின்றன. குறிப்பாக இளைஞர், மாணவர் அமைப்புகள் சோசலிச மற்றும் புரட்சிகர கருத்துக்களை மக்களிடையே எடுத்துச் செல்வதற்கான சாதனங்களாகப் பயன்படுகின்றன. பிற மக்கள் திரள் அமைப்புகளுக்கு இளம் நிர்வாகிகளையும் முன்னணியினரையும் பெற்றுத் தரக்கூடியதாக இருக்கின்றன.

**(3) அரங்க மக்கள் திரள் அமைப்புகள்:**

(கலாச்சார அமைப்புகள் போன்றவை) குறிப்பிட்ட துறையில் மக்களுடைய தப்பெண்ணங்களை அகற்றுவதும் விழிப்புணர்ச்சியூட்டி அமைப்பாக்குவதும் அதன் மூலம் புரட்சிகர இயக்கத்துக்கு – அரசியலுக்கு-- வாழ்க்கைக்கு நெருங்கி வரும்படிச் செய்வதும் இவற்றின் நோக்கங்களாகும். இத்தகைய அமைப்புகள் சமூக, கலாச்சார மற்றும் பல்வேறு அரங்குகளில் கட்சியை மக்களுடன் தொடர்புபடுத்துகின்றன.

**(4) அரசியல் அதிகாரத்துக்கான அதிகார மக்கள் திரள் அமைப்புகள்:**

ஐக்கியமுன்னணி, படை, சோவியத்துகள் போன்றவை. இத்தகைய அமைப்புகள் கட்சியின் பொதுத்திட்டம் அல்லது குறிப்பான திட்டங்களின் அடிப்படையில் கட்டப்படுபவையாகும். இத்தகைய அமைப்புகள் மூலமே மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுகிறார்கள். அரசியல் அதிகாரத்தைச் செலுத்துகிறார்கள். இவை கட்சியை நிர்வாக அரங்கில் மக்களுடன் தொடர்புபடுத்துகிறது.

எல்லா மக்கள் திரள் அமைப்புகளும் அரசியல் அதிகார மக்கள் திரள் அமைப்புகளைச் சுற்றி மக்களை அணிதிரட்டுவதையே தமது இறுதி நோக்கமாகக் கொண்டவையாகும்.

படிப்பகம்

www.padippkam.com



மூலவுத்தி, செயலுத்தி முழக்கங்கள் அடிப்படையில் அமையும் பிரச்சாரம், கிளர்ச்சி, அம்பலப்படுத்துதல்கள் மக்களை அரசியல் படுத்துகின்றன; அமைப்புகள் மக்களுக்கு ஜனநாயக வாழ்க்கைக்கு பயிற்சி அளிக்கும் களனாக விளங்குகின்றன. எதிரிகளை வீழ்த்த மட்டுமல்ல, மாற்றாக ஆக்கபூர்வமான அதிகாரத்தை நிறுவவும், எதிர்காலத்தில் சமுதாயத்தை வழிநடத்திச் செல்லவும், நம்பிக்கையையும் பயிற்சியையும் அவை அளிக்கின்றன.

அனைத்து வகை மக்கள் திரள் அமைப்புகளும் கட்சியின் மூலவுத்தி, செயலுத்தி நோக்கங்களையே தமது இறுதி நோக்கமாகவும் தமது நடைமுறைக்கு வழிகாட்டும் கோட்பாடுகளாகவும் கொண்டிருப்பதன் மூலம் அந்த அடிப்படையில் அவை அனைத்தும் ஒத்த கருத்தும், ஒத்த சித்தமும், ஒத்த நடவடிக்கையும் கொண்டவையாக இருக்கின்றன. இவ்வகையில் அனைத்து மக்கள் திரள் அமைப்புகளையும் ஒருங்கிணைந்த முறையில் வழி நடத்திச் செல்வது கட்சியேயாகும்.

படிப்பகம்